# குர்ஆன் மீது முஸ்லிம்களுக்கு உள்ள கடப்பாடுகள் (பொறுப்புகள்)

ஆசிரியர் : Dr. இஸ்ரார் அஹ்மத், தமிழில் : பேராசிரியர் H. அப்துல் ஸமது.

வெளியீடு : புர்கான் டிரஸ்ட்

---

கடந்த பல ஆண்டுகளாக, இஸ்லாமிய உலகில் குர்ஆன் கிராஅத் போட்டிகள் தவறாது நடத்தப்படுகின்றன. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் புகழ்பெற்ற காரிகள் பலர் இப்போட்டிகளில் பங்கெடுக்கின்றனர். திருக்குர்ஆனைச் சொல் தெளிவுடன் முறையான உச்சரிப்புடன் இனிய தொனியில் ஓதும் அவர்களின் தனித்திறமையை இவ்விதம் வெளிப்படுத்துவது நல்ல நோக்கமும் சிறந்த சேவையும் ஆகும் என்பதில் ஐயமில்லை. திருமறையின் வசனங்கள் அழகிய தெளிவான உச்சரிப்புடன், இனிய ஒலியில் பயபக்தியுடன் ஓதப்படுவதைத் திரளான மக்கள் செவிமடுத்து மனம்நெகிழ்ந்து பரவசமடைகின்றனர். தாம் கேட்டு அனுபவித்த வசனங்கள் இறை வெளிப்பாடாகிய இறைமொழிகளே என்ற வாய்மையில் உறுதிகொள்ள இந்நிகழ்ச்சிகள் ஒரு தூண்டுகோலாக அமைகின்றன. மேலும் மலேசியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தஜ்வீத் (குர்ஆனை முறையான உச்சரிப்புடன் அழகிய முறையில் ஓதும்) கலையில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்கி உள்ளன இந்நிகழ்ச்சிகள். அண்மைக் காலங்களில் பொதுவாகவே குர்ஆனை ஓதுவதில் ஏற்பட்டிருந்த அசிரத்தை மாறி, மேலே குறிப்பிட்ட நாடுகளில் சிறுவர் சிறுமியர் திருமறையை தஜ்வீத் முறைப்படி ஓதுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திருக்குர்ஆனை இனிமையாக தஜ்வீத் முறைப்படி ஓதுவதற்குப் பயிற்சியும் ஆர்வமும் ஊட்டும் இந்நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்தும் நோக்கம் அணுவளவும் நமக்கில்லை. ஆனால் இத்தகைய போட்டிகள் முஸ்லிம்களுக்கும் இறைமறையாம் திருக்குர்ஆனுக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட இடைவெளியை நீக்க எந்த அளவிற்கு உதவியுள்ளன என்ற கேள்வி மனத்தில் எழாமலில்லை. முஸ்லிம்களுக்கும் குர்ஆனுக்கும் இடையே நிலவவேண்டிய யதார்த்த இணைப்பை உருவாக்க இந்நிகழ்ச்சிகள் உதவியுள்ளனவா?“ என்ற கேள்விக்கு இல்லை“ என்றே வெகு ஆதங்கத்துடன் பதில் கூறியாக வேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளில் அண்மைக் காலங்களில் எண்ணிறந்த சமயக்கருத்தரங்குகளும், ஆய்வுக்குழுமங்களும் நடந்தேறியுள்ளன. அவையாவும் நமக்கும் திருமறைக்கும் இடையே நிலவ வேண்டிய இறையுணர்வு மிக்க பிணைப்பை உருவாக்கித் திருமறையின் போதனைகளை நம்மனத்தில் பதிய வைத்து, நிலைப்படச் செய்யும் வழியை வகுக்கத் தவறி விட்டன. இஸ்லாமிய மாநாடுகளிலும் கருத்தரங்கங்களிலும் பங்கேற்று ஆய்வுரைகள் ஆற்றிய கல்வியாளர்களும் மேதைகளும் இறைமறையின் மகத்துவத்தையும், சிறப்பையும் அற்புதத்தையும் ஏற்றெடுத்துப் போற்றினார்களே அல்லாது இறைமறை திருக்குர் ஆன்மீது நமக்குள்ள கடப்பாடுகள் யாவை அவை எவ்விதம் நிறைவேற்றப்படவேண்டும் என்பன போன்ற அவசியமும் தேவையுமிக்க கருத்துக்களை எடுத்துரைக்கவில்லை. இறைமறையின் கீர்த்தியையும் மேன்மையையும் நாம் நம் நாவன்மை கொண்டு முழுமையாக விவரித்து விட முடியாது. திருக்குர் ஆனை வழங்கிய அல்லாஹ்வும், அது யார் மூலம் வழங்கப்பட்டதோ அந்த இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுமே அதன் கீர்த்தியையும் மேன்மையையும் முழுமையாக அறிவர். எனவே திருக்குர்ஆனின் தனிச் சிறப்பியல்புகளைப் பகட்டாக விவரிப்பதில் காலத்தை விரயம் செய்வதை விட்டு விட்டு திருக்குர்ஆன்மீது நமக்குள்ள கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் உணர்ந்து அவற்றை மனமுவந்து நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். இதுவே இன்றையக் கால கட்டத்தில் தேவையும் ஏற்பும் உடைய செயலாகும் இக்கடமையை நிறைவேற்றுவதில் நம்மவர்கள் அலட்சிய மனப்பான்மையுடையவர்களாகக் காணப்பட்டால் அந்நிலையை அகற்றிட வேண்டும். இதுவே நமக்கு

ஈடேற்றத்தைத் தேடித் தரும் வழியாகும். பகட்டான புகழுரைகளால் திருக்குர்ஆனை மேம்படுத்திக் கூறுவதால் அந்தத் திருக்குர் ஆன் மீது நமக்குள்ள கடப்பாடுகளையும் அது நம்மீது சுமத்தும் பொறுப்புகளையும் நாம் நிறைவேற்றியவர்களாகி விடமாட்டோம்.

திருக்குர்ஆன் சம்பந்தமாக நமக்குள்ள கடப்பாடுகள் யாவை?

1. முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் குர்ஆன், இறைவன் வழங்கிய மறை (வேதம்) என மனமொழிகளால் ஈமான் (உறுதியான நம்பிக்கை) கொள்ளுதல்

2. அதனை முறையாகவும் வழக்கமாகவும் ஓதுதல்.

3. அதன் பொருளையும் போதனையையும் விளங்கி அறிந்து கொள்ளுதல்

4. அதன் போதனைகளை ஏற்று அவற்றிற்கேற்ப செயல்படுதல்.

5. அதன் போதனைகளை மக்களுக்கு எடுத்துரைத்தல்

மேற்கூறிய கடப்பாடுகளை எல்லாம் விவரிப்பதோடு திருமறையில் அவை எவ்விதம் விளக்கப்பட்டுள்ளன என்பதையும் காண முற்படுவோம். இம் முயற்சியினால் திருமறை சம்பந்தமாக நமக்குள்ள பொறுப்புகளை அறிந்துகொள்வதோடு திருமறையின் சொல்லாட்சி பற்றிய அறிவும் ஓரளவு பெறுவோம்.

(ஈமானும் பயபக்தியும் (திருக்குர்ஆனின் தெய்வ வெளிப்பாடு பற்றிய நம்பிக்கையும் அதன்மீது பயபக்தியும் கொள்ளுதல்)

நம்முடைய புலன் உணர்வுக்கு அப்பாற்பட்ட மறைபொருள் பற்றி நாம் கொள்ள வேண்டிய நம்பிக்கையைத் திருக்குர்ஆன் பொதுவாக ஈமான்“ என்று குறிப்பிடுகிறது ஈமான் இரண்டு விதமான படித்தரங்களைக் கொண்டதாகும். ஒன்று: நாவால் மொழிதல் இரண்டு: உள்ளத்தால் உறுதி கொள்ளுதல்.

இஸ்லாம் கற்பிக்கும் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட உண்மைகள் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக நாவால் மொழிவது, ஒரு மனிதன் அப்புனித மார்க்கத்தை (வாழ்க்கை நெறியை) ஏற்றுக்கொள்ள விதிக்கப்படும் முதல் நிபந்தனை ஆகும். எனினும் அந்நம்பிக்கை உள்ளத்தில் ஆழப்பதிந்தால் மாத்திரமே ஈமான் உண்மையானதாகவும் பலமுள்ளதாகவும் அமைய முடியும்.

திருக்குர் ஆன் மீது ஈமான் கொள்வது என்றால் என்ன?

இறைவன் முஹம்மது நபி(ஸல்) அவர்களுக்கு, அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட, வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்கள் மூலம் வெளிப்படுத்திய இறைவேதமே திருக்குர் ஆன் என்று முதல் கட்டமாக நாவால் மொழிய வேண்டும். இங்ஙனம் நாவால் மொழிவது கொண்டு தனி மனிதன் ஒருவன் முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவன் என்பது வெளியாகிறது, என்றாலும் நாவால் மொழிவது கொண்டு மாத்திரம் ஈமானில் மனவுறுதி அவனுக்கு ஏற்பட்டு விட்டதாகக் கூறவியலாது. உள்ளுணர்வோடு உறுதிகொண்டு இந்நம்பிக்கையில் பற்றும் ஈடுபாடும் உருவாக வேண்டும், அப்போதுதான் மகத்துவமிக்க உண்மையான ஈமானின் வெளிச்சம் இத்தகைய உறுதியுள்ளவரின் இதயத்தில் ஒளி வீசத் தொடங்கும். திருக்குர் ஆன் மீது மதிப்பும் கண்ணியமும் அதிகரிக்கும் அதன் மீதுள்ள நம்பிக்கை வலுப்படும் அவனுடைய சிந்தை திருமறையின் வசிய ஆற்றலால் ஈர்க்கப்படும். இவ்விதம் ஈமானும் இறையுணர்வும் ஒருங்கிணைந்து இருப்பது அவசியம். முஹம்மது(ஸல்) அவர்கள் மூலமே இறைமறை மனித வர்க்கத்திற்கு வழங்கப்பட்டது எனவே முதன் முதலாக அதன்மீது ஈமான் கொண்டவர்கள் அவர்கள்தான். நபி(ஸல்) அவர்களை அடுத்து அவர்களின் உத்தமத் தோழர்கள் ஈமான் கொண்டார்கள், இவ்வுண்மையைத் திருக்குர்ஆனே தெளிவுபடுத்துகின்றது.

(நம்முடைய) தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்ட (வேதத்)தை மெய்யாகவே விசுவாசிக்கின்றார் (அவ்வாறே மற்ற) விசுவாசிகளும் (விசுவாசிக்கின்றனர்)‘ (அல்குர்ஆன்:2:285)

அல்லாஹ்வின் திருவாக்குதான் திருக்குர்ஆன்“ என்ற வாய்மையில் (வாய்மை என்றும் தவறா உண்மை) அவர்களுக்கு ஏற்பட்டிருந்த ஈமான் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி உறுதி மிக்கதாக இருந்தது. அவர்கள் திருமறையின் மீது ஒப்புயர்வற்ற பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தார்கள், எனவேதான் நபி(ஸல்) அவர்கள் தமக்கு வஹி‘ (வேத வெளிப்பாடு) வரும் வேளையை ஆவலுடனும் ஆர்வத்துடனும் எதிர்நோக்கிய வண்ணம் இருந்தார்கள். வஹி‘ இறங்குவதற்குத் தற்காலிகமாகக் காலதாமதம் ஏற்பட்டபோது சஞ்சலம் அடைந்தார்கள் மீண்டும் வரத் தொடங்கிய வுடன் ஆர்வத்துடனும் ஆவலுடனும் வெகு துரிதமாக அதை மனனம் செய்ய முனைந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் தமக்கு வஹி‘ மூலம் அறிவிக்கப்பட்ட இறைவசனங்களை மனனம் செய்யும் போது அவர்களுக்கு உண்டான பதற்றத்தையும் துரிதத்தையும் கண்ட (இறைவன்) அவர்கள் மீது இரக்கமும் கருணையும் கொண்டு இவ்வசனத்தை இறக்கியருளினான்.

(நபியே!)குர்ஆனைப்பற்றி உமக்கு வஹி அறிவிக்கப்பட்டு அது முடிவடைவதற்கு முன்னதாகவே (அதனை ஓத) நீர் அவசரப்படாதீர்“ (அல்குர்ஆன்20:114)

(நபியே!) ஜிப்ரீல், வஹி‘ மூலம் ஓதிக் காண்பிக்கும் வசனம் தவறி விடுமோ என்று பயந்து அவர் ஓதி முடிக்கும் முன்னர் நீர் அவசரப்பட்டு அதனை ஓத உம்முடைய நாவை அசைக்காதீர்“ (அல்குர்ஆன் 75:16)

நபி(ஸல்) அவர்களுக்கு வஹி‘ வரத்தொடங்கிய ஆரம்ப காலங்களின் ஒரு கட்டத்தில் அதற்குத் தாமதம் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் நபி(ஸல்) அவர்கள் கடும் மன வேதனைக்கும் கவலைக்கும் உள்ளானார்கள். மலை உச்சியிலிருந்து சாடி விழுந்து விடலாமா என்று எண்ணும் அளவிற்கு மனச் சோர்வு அடைந்தார்கள். திருக்குர்ஆன் மீது அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பற்றும் ஈடுபாடும் காரணமாக இரவில் தொழுகையில் வெகுநேரம் குர்ஆனை ஓதுவதில் கழித்தார்கள். தொழுகையில் வெகுநேரம் திருமறையின் வசனங்களை ஓதிய வண்ணம் நின்று கொண்டிருந்தமையால் அவர்களுடைய கால்கள் வீங்கி விடும். நபி(ஸல்) அவர்களின் தோழர்களும் இவ்வாறே திருமறையின் மீது மீளாப்பாசம் கொண்டு இரவில் வெகுநேரம் குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்கள். நபித்தோழர்களில் பெரும்பாலானோர் திருமறை முழுவதையும் வாரத்தில் ஒரு முறை ஓதி முடிக்கும் வழக்கமுடையவர்களாக இருந்தனர். திருக்குர்ஆன் நபி(ஸல்) அவர்கள் மூலம் வெளிப்பட்டிருந்தும் அவர்கள் தங்கள் தோழர்களை குர்ஆனை ஓதிக்காட்டும்படி ஏவுவார்கள். பரவசமடைந்து. இதயம் கனிந்து. உள்ளம் உருகியவர்களாகச் செவி சாய்த்து அதனைக் கேட்கும் நபி (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும், திருக்குர்ஆன் அல்லாஹ்வினால் வெளிப்படுத்தப்பட்ட வேதம்: அதுவே நிறைவுபெற்ற முழுமையான அறிவு என்ற உறுதிவாய்ந்த ஈமான் கொண்டிருந்தமையால்தான் அதன்மீது இத்தகைய பற்றும் ஈடுபாடும் கொண்டவர்களாக நபி(ஸல்) அவர்களும் அவர்களின் திருத்தோழர்களும் திகழ்ந்தார்கள்.

திருக்குர்ஆன் மீது நமக்குள்ள ஈமான் எந்தத் தரத்திலுள்ளது?

திருக்குர்ஆன் இறைவனால் அருளப்பட்ட வேதம் என நாம் வெளிப்படையாகக் கூறுவது உண்மையே. அல்லாஹ்வின் திருவாக்குதான் திருக்குர்ஆன் என ஈமான் கொண்டு அதைப் பகிரங்கமாகக் கூறிவரும் கூட்டத்தாரில் நம்மையும் உட்படுத்தியமைக்காக நாம் என்றென்றும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எனினும் நாம் வெளிப்படையாகச் சாதாரணமாகக் கூறும் குர்ஆன் அல்லாஹ்வின் வாக்கே“ என்ற உண்மை நம்மில் பெரும் பாலானோரின் இதயங்களில் ஆழப்பதியவில்லை. எனவேதான் நாம் திருக்குர்ஆனை அலட்சியம் செய்கிறோம். அதன் போதனைகளைக் கடைப்பிடிப்பதில் பாராமுகமாக

இருக்கின்றோம். திருமறையின் மீது உறுதியான நம்பிக்கை நம் இதயங்களில் உறைவதற்குப் பதிலாக வீண் சந்தேகங்களும் விதண்டா வாதங்களுமே தோன்றி முளைவிடுகின்றன. சொல்வதற்கும் கேட்பதற்கும் கசப்பாகவே இருப்பினும் இதுவேதான் உண்மையான நிலை. நம்மிடையே இன்று நிலவி வரும் சந்தேகம், உறுதியற்ற நம்பிக்கை, இவை குறித்து அல்லாஹு திருக்குர்ஆனில் கீழ்வருமாறு விவரித்துள்ளான்:

தவிர அவர்களுக்குப் பின்னர் அவ்வேதத்தை அனந்தரங் கொண்டார்களே அவர்களும் நிச்சயமாக அதில் பெரும் சந்தேகத்தில் தான் ஆழ்ந்து கிடக்கின்றனர்“ (அல்குர்ஆன் 42:14)

குர்ஆன் மீது யதார்த்தத்தில் காணப்பட வேண்டிய பற்றும் பிணைப்பும் நமக்கு ஏற்படவில்லை. அதைக் கற்றுக் கொள்வதில் அசிரத்தையாகவும் உள்ளோம். அதன் கருத்துக்களைப் புரிந்து கொள்வதிலும் அவைபற்றி ஆழ்ந்து சிந்திப்பதிலும் நம்மிடையே அலட்சிய மனப்பான்மையே நிலவுகிறது. திருமறை போதிக்கும் நெறிமுறையை ஒட்டி நம் வாழ்க்கை முறை அமையவில்லை. இவற்றிற்கெல்லாம் மூல காரணம் நம் ஈமான் ஆழமும் உறுதியுமற்றதாக இருப்பதுதான். கவலைக்குரிய இக்குறையை நாம் நிவர்த்தி செய்யாதவரை நம்முடைய சன்மார்க்கப் போதனைகளால் எவ்விதமான பலனும் ஏற்பட்டு விடாது. எனவே முஸ்லிம்கள் ஒவ்வொருவருடைய தலையாயக் கடமை குர்ஆன் மீது தமக்குள்ள நம்பிக்கையின் தரத்தைப்பற்றிப் பரிசீலனை செய்வதே ஆகும். குர்ஆன் இறைவெளிப்பாடு என வெறும் கொள்கையளவில் ஈமான் கொண்டதோடு மாத்திரம் திருப்தியடைந்து நம்முடைய அன்றாட வாழ்கையில் குர்ஆனுக்கு எவ்விதப் பங்கும் பந்தமும் இல்லை என்ற நிலையில் செயல்படுகின்றோமா? அல்லது திருக்குர்ஆன் அல்லாஹ்வின் திருவாக்கு என்பதில் சிறிதும் சந்தேகமின்றி நிலையான மனவுறுதியுடன், நம்மை நேர்வழி நடாத்தவல்ல வாழ்க்கை நெறி“ அதில்தான் அடங்கியுள்ளது என்ற திட சித்தத்துடன் திருமறை கூறும் நெறியில் செயல்படுகின்றோமா? சிந்தித்து, ஆலோசித்துப் பரிசீலிக்க வேண்டும். திருக்குர்ஆன் இறைவாக்கே“ என்ற நம்பிக்கை. அது கூறும் மார்க்கமே நன்னெறி என்ற மனவுறுதி இவற்றோடு நம் செயல்களும் இவற்றிற்குகந்து அமைந்திருப்பின் நாம் திருப்தி அடைந்து அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் நம்மில் பெரும்பாலானோரின் நிலை வேறு விதமாகவே உள்ளது. முதற்கண் நாம் இக்குறையைக் களைந்திட வேண்டும். அதல்லாமல் நாம் நம்முடைய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முடியாது.

இக்குறையைக் களைந்து நிவர்த்தி செய்வது எப்படி?“ என்ற கேள்வி எழலாம். உண்மையான ஈமானுடன் திருமறையின் சன்மார்க்க நெறிக்கேற்ப வாழும் நல்லடியார்களின் உறவும் இணக்கமுமே நம்மிடம் மனவுறுதியோடு கூடிய உண்மையான ஈமான் உருவாகத் தூண்டுகோலாக அமையும். ஈமானின் உருவாகவும் உறைவிடமாகவும் திகழ்ந்த நபி(ஸல்) அவர்களோடு எந்நேரமும் கூடிக்குலாவி அவர்களுடனேயே வாழ்ந்து வந்த காரணத்தால்தான் நபித் தோழர்களின் ஈமான் ஒப்புயர்விலாத் தன்மையும் தரமும் உடையதாகத் திகழ்ந்தது, நபி (ஸல்) அவர்களுக்குப் பின் இந்த நிலை எப்படிச் சாத்தியமாகும்? சாத்தியமல்லதான். எனினும் இன்றையக் கால கட்டத்திலும் நம் ஈமான் முழுமையும் உறுதியும் பெற சாதகமான ஒரு சசூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளவியலும். இறையுணர்வு மிகுந்து இறைவழி நடக்கின்ற நல்லடியார்களுடன் இணைந்து வாழ்வது கொண்டே இது சாத்தியமாகும். நம்முடைய ஈமானைத் தளரவிடாமல் என்றும் உறுதியுடன் நிலைக்கச் செய்ய நல்லடியார்களின் துணையும் உறவும் இன்றியமையாதவை. நல்லடியார்கள் திருமறையைக் கற்றுத் தேர்ந்து அதன் கருப்பொருளை விளங்கிக் கொண்டு தம் ஈமானைத் திடமுடையதாகவும் உறுதிவாய்ந்ததாகவும் ஆக்கிக் கொள்கின்றனர். அது மாத்திரமல்லாமல், நபி (ஸல்) அவர்களோடும் நபித் தோழர்களோடும் நேரடியான தொடர்பு கொண்டிருந்தால் எத்தகைய மார்க்க அறிவு வளர்ச்சியையும் மார்க்க நடைமுறையையும் பெற முடியுமோ அத்தகைய அறிவையும் செயல்முறைகளையும் நபி(ஸல்) அவர்களுடையவும், அவர்கள்தம்

தோழர்களுடையவும் வாழ்க்கை வரலாறுகளை ஊன்றி வாசித்து, அதன் மூலம்பெறுகிறார்கள், எனினும் திருக்குர்ஆன் மீது நமக்கு மனம் ஒன்றிய ஈமான் உருவாகவும் அது வேரூன்றி உறுதிபெறவும் உறுதுணையாக அமைவது திருக்குர்ஆன் ஒன்றே என்பதை நாம் மறந்து விடலாகாது.

இறைநம்பிக்கை என்பது வெளியில் எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு நம் இதயங்களில் நடப்படவேண்டிய ஓர் அம்சம் அல்ல. மாறாக, அடிப்படை உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு உருப்பெற்று, உள்ளங்களில் ஒளி வீசிப் பரவிப்படர்ந்து பிரதிபலிக்க வேண்டிய ஓர் உன்னதப் பண்பாகும். ஈமானில் உள்ளடங்கியுள்ள நிரந்தர உண்மைகளை ஏற்று அவற்றை வெளியே பிரத்திபலித்துக் காட்டும் ஒர் அற்புதக் கண்ணாடியே மனித இதமாகும். சீரற்ற சகூழ்நிலையில் சுழல்வதாலும் முறையற்ற கல்வியைப் பயில்வதாலும் இதயக் கண்ணாடியின் ஒளி மங்கி அதன் பிரதிபலிக்கும் தன்மை பாதிக்கப்பட்டு விடுகிறது. இக்கண்ணாடிக்கு மெருகேற்றி மிளிரச் செய்து மனித உள்ளொளியைச் செவ்வனே பிரதிபலிக்கச் செய்வதற்காகவே அல்லாஹ் திருக்குர்ஆனை வழுங்கியுள்ளான். மேலும் அது நம் உள்ளத்தின் (ஈமானின்) ஒளியையும், (உலக ஆசாபாசங்களால்) கறைபடாத நம் இதய ஆழத்தில் எழும் இறைஅச்சத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

இது (திருக்குர்ஆன்) நம்மை நோக்கி நிற்கும் அனைத்து அடியார்களுக்கும் (மனிதனுக்கு இயல்பாக அமைந்த உண்மைகளை) அறிவுறுத்தவும் நினைவூட்டவும் செய்கிறது“. (அல்குர்ஆன்:50.8)

திருமறையைக் கற்று உண்மையை உணரும் ஆர்வத்துடன் அதன் கருப்பொருளை நாம் ஆய்வோமானால் நம் அகவிருள் அகன்று ஈமான் எனும் ஒளி நம் உள்ளத்தில் படர்ந்து ஜொலிக்கும். இதயக் கண்ணாடி மெருகேறி ஒளியைப் பிரதிபலிக்கத் தொடங்கிய பின்னரும் உலக இச்சைகளால் ஈர்க்கப்பட்டு மீண்டும் (ஈமான் எனும்) ஒளிமங்கும் நிலை நேரிடும்போதெல்லாம் நாம் திருக்குர்ஆனிடமே சரண் அடைய வேண்டும். இப்னு உமர் (ரழி) அவர்களால் அறிவிக்கப்பட்ட கீழ்வரும் நபிமொழி நம் இதயக் கண்ணாடி எவ்விதம் திருக்குர்ஆனின் ஆற்றலால் ஒளி பெறுகிறது என்பதை விளக்குகின்றது.

நீரில் மூழ்கிய இரும்பு துருப்பிடிப்பது போன்று, இதயங்களில் கறை படிந்து விடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் இதயத்தில் படியும் கறையை நீக்குவது எப்படி“ என வினவப்பட்டபோது, நபி(ஸல்) அவர்கள் அடிக்கடி மரணத்தைக் குறித்து நினைவு கூர்வதாலும், குர்ஆனை ஓதி வருவதாலும்“ என மறு மொழி பகர்ந்தார்கள் (சுஅப்அல் ஈமான்)

சுருங்கக் கூறின், குர்ஆனைப் பற்றி இன்றைய முஸ்லிம்கள் கொண்டுள்ள அலட்சிய மனோபாவம், அவர்கள் அதைப் புனிதம் வாய்ந்த திருமறை என வெறும் கொள்கை அளவில் நம்புவதால் மாத்திரம் மாறிவிடாது. திருக்குர்ஆன் நம்மீது சுமத்தும் நியாயமான யதார்த்தக் கடப்பாடுகளை நிறைவேற்ற நாம் உண்மையில் விழைவோமானால் முதற்கண் திருக்குர்ஆன் இறைவன் வழங்கிய வேதமே என்ற மன உறுதி உருவாக வேண்டும். இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மூலம் மனித இனத்திற்கு நல்கப்பட்ட வாழ்க்கை நெறி அடங்கிய வேதம்‘ அது உலக முடிவு வரை நிலைத்து நிற்கும் சான்று அது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். அப்போதுதான் நம் மனோபாவத்தில் ஒரு மாற்றம் ஏற்படும். இம்மையில் இறைவனால் மனிதனுக்கு அருளப்பட்ட எண்ணிறந்த பாக்கியங்கள் அனைத்தையும் விட திருக்குர்ஆனே மேம்பட்டது என்ற உண்மை புலப்படும். திருக்குர்ஆனை அன்றாடம் ஓதுவதால் நமக்கு மார்க்க விழிப்புணர்ச்சி ஏற்படும். இறைவாக்குகளின் கருப் பொருட்களில் கவனம் செலுத்துவதால் நம் அறிவு விசாலமடைந்து இதயம் தூய்மை பெறும், இறைவனைப்பற்றிய யதார்த்தங்களை (அப்பட்டமான உண்மைகளை) முழுமையாக அறிவது என்பது நம் அறிவுக்கு அப்பாற்பட்டது, நபிமார்களுக்கு அடுத்தபடி மனிதருள் சிறந்தவர் எனப் போற்றப்படும் ஆபூபக்கர் சித்திக்(ரழி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள். அல்லாஹ்வைப் பற்றி மனிதனால் துல்லியமாக அறிந்து கொள்ளக் கூடிய உண்மை

என்னவென்றால் அவனைப்பற்றி முழுமையாக அறிவது சாத்தியமல்ல என்பது தான். அலி(ரழி) அவர்கள் இத்துடன் கீழ்வரும் சொற்களையும் சேர்த்துக் கூறியதாக அறிவிக்கப்படுகின்றது:- அல்லாஹ்வைப் பற்றிய உண்மைகளை ஊன்றி ஆராய்வது பல தெய்வ வணக்கத்திற்கு ஒப்பாகும்.“ இவ்விதம் நம் பகுத்தறிவைக் கொண்டு வரையறுக்க முடியாத வல்லமை படைத்த அல்லாஹ்வினால் அவனின் படைப்பினமாகிய மனித வர்க்கத்திற்கு அருளப்பட்ட பாக்கியங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது திருக்குர்ஆன் ஆகும். திருமறைக்கல்வி தெவிட்டாதது. நம் அறிவுஆற்றல் அனைத்தையும் அர்ப்பணித்து திருக்குர்ஆனுடைய சேவையில் ஈடுபட்டாலும் நம் வாழ் நாளை எல்லாம் அதன் கருப்பொருளை ஆய்வதில் கழித்தாலும் இறை வழங்கிய வேதகிரந்தங்களிலெல்லாம் தலை சிறந்ததும் இறுதியானதுமான திருக்குர் ஆனின் மகிமைக்கும் சிறப்பிற்கும் உரிய கடப்பாட்டை முழுமையாக நிறைவேற்றியதாகி விடாது.

திலாவத்தும் தர்த்தீலும் (நிதானமாக ஆழ்ந்த சிந்தனையோடு உச்சரிப்புப் பேணி ஓதுதல்)

ஓதுதல் என்பது அரபி மொழியில் கிராஅத் திலாவத் என்ற சொற்களால் அறியப்படும், இந்த இரண்டு பதங்களும் திருக்குர்ஆனில், திருமறையை ஓதுவதற்கு பிரயோகிக்கப்படுகின்றன. திருக்குர்ஆன் இறைவேதம் எனும் உணர்வோடும் தக்க பயபக்தியோடும் அதன் போதனைகளை விளங்கி மனத்திலிருத்தி அவற்றிற்கேற்ப நம் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கறையுடனும் திருமறையை ஓதுவதற்கு திலாவத்‘ எனும் பதம் பயன்படுத்தப்படுகிறது. திலாவத்ம் என்பது இறை வேதங்களை வாசிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சிறப்புப் பதம் ஆகும். (தமிழில் குர்ஆனை வாசிப்பது என்று சொல்லாமல் குர்ஆனை ஓதுவது என்று சொல்லுகிறோம், வாசிப்பது, ஓதுவது எனும் இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தந்தாலும் திருமறையைப் பொருத்த வரையில் ஓதுவது என்ற சொல்லையே பயன்படுத்துகிறோம், அதுபோன்ற ஒரு சிறப்புச் சொல் திலாவத்- மொழி பெயர்ப்பாளர்) கிராஅத்‘ என்பது எல்லாவிதமான நூல்களையும் வாசிப்பதைக் குறிப்பிடக் கையாளப்படும் பொதுவான சொல் ஆகும். வாசித்தல்‘ அல்லது ஓதுதல்‘ என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தப்படும் இந்த சொல்லாட்சிகளுக்கு இடையேயுள்ள வேறுபாடு அவற்றின் (உண்மையான) பொருள்களிலிருந்து தெளிவாகின்றது. திலாவத்‘ என்பதற்கு ஒருவரைப் பின்பற்றி நடப்பது அல்லது ஒழுகுவது“ என்பதும் கிராஅத்‘ என்பதற்குப் பல பொருட்களை ஒருங்கிணைப்பது அல்லது ஒன்று சேர்ப்பது“ என்பதும் பொருளாகும். ஆரம்பக் காலங்களில் கிராஅத்‘ எனும் சொல் திருக்குர்ஆனை ஓதக்கற்று அதன் கருப்பொருளை அறிந்து கொள்வதைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டது, காரி‘ என்பவர் தொடக்கத்தில் ஒரு மார்க்க அறிஞராகவே கருதப்பட்டார், காலப்போக்கில் இந்த சொல் அதன் யதார்த்தமான பொருளிலிருந்து மாறுபட்டு, திருக்குர்ஆனை தஜ்வீதின் ஒழுங்கு முறைகளுக்கேற்ப ஓதுவதைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது, திலாவத்‘ என்னும் பதம் புனிதத் திருமறையை. அதன் போதனைகளின் மூலம் நேர்வழி அடைந்து நற்பேறு பெறும் நோக்கத்துடன் அக்கறையுடனும் பயபக்தியுடனும் (இறையுணர்வுடன்) ஓதுவதற்குப் பிரயோகிக்கப்பட்டது.

திருக்குர்ஆனைத் திலாவத்‘ செய்வது ஒரு முக்கியமான இறைவழிபாடு மாத்திரமல்லாது நம்முடைய ஈமானைப் புதுப்பிக்கும் ஆற்றல் மிக்க வழியுமாகும், ஒருதடவை வாசித்த மாத்திரத்தில் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சாதாரண நூல் அல்ல திருக்குர்ஆன். திருக்குர்ஆன் மனித இனத்திற்கு ஊட்டம் தரக்கூடிய முழுமையான, நிறைவுபெற்ற ஒரு வேதம். ஆகையால் அது மீண்டும் மீண்டும் வாசிக்கப்பட வேண்டும். தினமும் ஊன்றிக் கற்கப்பட வேண்டும்.

நம்முடைய உடல் வளர்ச்சிக்கு மண்ணில் விளையும் உணவுப்பொருட்கள் தேவைப்படுவது போல் இறையுணர்விற்கும் நிலையான இறைவழிபாட்டிற்கும்இறைவெளிப்பாடாகியதிருமறை இன்றியமையாததாகும். திருக்குர்ஆன் ஒரு முறை வாசித்த அளவில் புரிந்து விளங்கிக் கொள்ளக் கூடிய

தரமும் தன்மையும் உடையதாயின் வேறு யாரும் அல்லவெனினும் யாரைக் காட்டினும் நம் நபி(ஸல்) அவர்களேனும் அதனை மீண்டும் மீண்டும் ஓத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கா தல்லவா? மாறாக நபி(ஸல்) அவர்கள் மீண்டும் மீண்டும் திருக்குர்ஆனை ஓதும்படி இறைவனால் அறிவுறுத்தப்பட்டதாகத் திருமறை வாயிலாகவே நாம் அறிகின்றோம், நபித்துவம் அருளப்பட்ட ஆரம்ப காலங்களில் நபி(ஸல்) அவர்கள் இரவின் பெரும்பகுதியை, நிதானமாக இனிய தொனியில் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் முன்னிலையில் தொழுதவண்ணம் நிற்கும்படி கட்டளையிடப்பட்டார்கள் நபித்துவத்தின் இறுதிக்காலங்களில் பல இன்னல்கள் தோன்றின, அவற்றைச் சமாளிக்க மிக்க மன தைரியமும் ஊக்கமும் தேவைப்பட்டபோதெல்லாம் திருக்குர்ஆனை ஓதிவரும்படி இறைவனிடமிருந்து கட்டளை பிறந்தது, கஹ்ஃபு (குகை) எனும் அத்தியாயத்தில் நபி(ஸல்) அவர்கள் கீழ்வருமாறு பணிக்கப்பட்டார்கள் :-

(நபியே) வஹி மூலம் உமக்கு அறிவிக்கப்பெற்ற உம் இறைவனின் வேதத்தை ஓதி வருவீராக! அவனுடைய வார்த்தைகளை எவராலும் மாற்றிவிட முடியாது. அவனையன்றித் தஞ்சமளிப்பவன் யாரையும் நீர் காண மாட்டீர்“. மேலும் நூலாம் (சிலந்திப்) பூச்சி எனும் அத்தியாயத்திலும் இது போன்ற பிறிதொரு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(நபியே!) வஹி மூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட (இவ்) வேதத்தை நீர் ஓதி தொழுகையைக் கடைப்பிடித்து வாரும்“ (அல்குர்ஆன் 29:45)

மேலே கூறிய உண்மைகளிலிருந்து இறையுணர்வை நிலை நிறுத்தவும், ஈமானுக்குப் புத்துணர்ச்சி ஊட்டவும், துன்பங்களையும் இன்னல்களையும் நீக்கவும் திருக்குர்ஆனை ஓதுவது இன்றியமையாதது என்பது புலனாகும். கீழே வரும் அல்பகரா“ எனும் அத்தியாயத்திலுள்ள வசனம் திருக்குர்ஆனில் பற்றும், பாசமும், மிகுந்த ஈடுபாடும் கொண்டவர்கள் அவற்றை எவ்விதம் வெளிப்படுத்தினர் என்பதை எடுத்துரைக்கிறது:

(நபியே!) நாம் வேதம் கொடுத்தவர்களில் எவர்கள் அதை ஓத வேண்டிய (முறைப்படி) ஓதி அறிந்து நடக்கின்றார்களோ அவர்கள் (திருக்குர் ஆன் ஆகிய) இதனையும் (அவசியம்) விசுவாசிப்பார்கள்.“ (அல்குர்ஆன் 2:121)

குர்ஆன் எப்படி செவ்வனே கற்கப்பட வேண்டுமோ அப்படி அதனை கற்றறிவதற்குரிய ஆற்றலை இறைவன் நமக்குத் தந்தருள்வானாக! திருக்குர்ஆனை முறையாகக் கற்பதற்கு அதனைச் சீரான முறையில் ஓதும் விதத்தை அறிந்து அதற்கான பயிற்சியை மேற்கொள்வது அவசியம்.

தஜ்வீத்:

தஜ்வீத் கலையைக் கற்க முதலாவதாக அரபி எழுத்துக்களையும் அவற்றின் உச்சரிப்பையும், திருக்குர்ஆனை ஓதும்போது எந்தெந்த இடங்களில் எவ்வாறு எவ்வளவு வினாடி நிறுத்தி ஓத வேண்டும் என்பதையும் அவற்றிற்கான அவசியத்தையும் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆனைத் தடையின்றிச் சரளமாக ஓத இவற்றையெல்லாம் அறிந்திருப்பது அவசியம். இருபதாம் நூற்றாண்டின் முப்பதாம் நாற்பதாம் ஆண்டுகளில் இந்தோ- பாகிஸ்தான் துணைக் கண்டத்தில் முஸ்லிம் (குழந்தைகள்) ஒவ்வொருவரும் தம் கல்வியை தஜ்வீத்‘ விதிகளைக் கற்பது மூலம் தொடங்குவது வழக்கமாக இருந்தது, தொடக்க நிலையிலேயே அவர்களுக்கு குர்ஆனின் எழுத்துக்களைக் கற்பித்து அவற்றைச் சீராகவும் முறையாகவும் உச்சரிப்பதிலும் பயிற்சி அளிக்கப்பட்டது, தொடக்கத்தில் கூறியதுபோல் சில நாடுகளில் தஜ்வீத்‘ கலையைப் பரப்ப ஊக்கமும் பயிற்சியும் அளிக்கப்பட்டாலும், நம்மில் அநேகர் இளைஞரும் முதியோரும் உட்பட திருக்குர்ஆனைச் சாதாரணமாக ஓதவும் தெரியாதவர்களாகவே உள்ளனர், இத்தகைய அவல நிலைக்குக் காரணம்: ஒன்று: மஸ்ஜிதுகளிலும்

அரபி மதரஸாக்களிலும் நம் சமுதாயச் சிறுவர்களுக்குப் புகட்டி வந்த மார்க்கக் கல்வி சீராகத் தொடர்ந்து கற்பிக்கப்படாமல் அலட்சியம் செய்யப்பட்டது: இரண்டாவதாக, நம் சமுதாயத்தினர் தம் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பாடசாலைகளில் தான் படித்து முன்னேற வேண்டும் என்ற மோகத்தால் உந்தப்பட்டு திருக்குர்ஆன் கற்றுத்தரப்படாத, மார்க்கக் கல்வி புகட்டப்படாத கல்விக் கூடங்களுக்குத் தம் மக்களை அனுப்பியது. இந்நிலையை மாற்றி அமைப்பதற்கான வழிமுறை என்ன?

திருக்குர்ஆனை ஓத அறியாத ஒவ்வொருவரும் வயது வரையறையின்றி தங்களின் இக்குறையைப்பற்றி கவலை கொண்டு அதை நிவர்த்தி செய்ய ஆவன செய்ய முன் வரவேண்டும் அது மாத்திரமல்லாமல் நம் குழந்தைகளின் கல்வி தஜ்வீதில் தொடங்கி, திருக்குர்ஆனை எப்படி முறையாக ஓதுவது என்பதைக் கற்பதன் மூலம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இது நம் தீர்க்கமான முடிவாக இருக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்த விரும்பவில்லை என்றாலும் திருக்குர்ஆனை சொல், தெளிவுடன் முறையான உச்சரிப்புடன் நிறுத்தி, ஓத வேண்டிய இடங்களை அறிந்து, கவனித்து, அனுசரித்து ஓதும் திறனைப் பெற வேண்டியது கற்றறிந்த முஸ்லிம் ஒவ்வொருவருடைய கடமையாகக் கருதப்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லியே ஆகவேண்டும். இம்முறைகளை எல்லாம் கற்றுக் கொள்ளாது திருக்குர்ஆனைச் சீராக ஓத முடியாது என்பதை உணர வேண்டும்.

தினமும் குர்ஆனை ஓதுதல்:

நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளபடி தினமும் திருக்குர்ஆனை ஓத வேண்டும் என்ற பொறுப்பை நிறைவேற்ற நாம் விரும்புவோமானால். நாம் நம்முடைய அன்றாட அலுவல்களில் ஒன்றாக அதைக் கருதி தவறாமல் திருமறையின் ஒரு பகுதியை ஓதி வர வேண்டும். ஓத வேண்டிய அளவு. அவரவரின் முயற்சிக்கும் ஈடுபாட்டிற்கும் தக்கபடி மாறுபடலாம். நாள்தோறும் ஓத வேண்டிய அளவின் உச்ச வரம்பு மொத்த திருக்குர்ஆனில் மூன்றில் ஒரு பங்கு என நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். மூன்றில் ஒரு பகுதி தினமும் ஓதப்படுமாயின் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதி முடிக்க மூன்று நாட்கள் ஆகும். குறைந்தபட்சம் ஒரு (ஜு ஸு ) பாகம் தினமும் ஓதி வந்தால் ஒரு மாதத்தில் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதி முடிக்கலாம், இதற்கும் குறைவாக ஓதுவது பரிந்துரைக்கக்கூடிய அளவோ, தரமோ உடையதல்ல. இவ்விரண்டு அளவிற்கும் இடையில் நடுத்தரமான ஓர் அளவு நிர்ணயிக்கப்படவேண்டுமானால் அது திருக்குர்ஆன் முழுவதையும் ஒரு வாரத்தில் ஓதி முடிக்கின்றவகையில் அமைய வேண்டும், இந்த முறையைத் தான் நபித்தோழர் பெருமக்களில் பலரும் பின்பற்றி ஓதி வந்திருக்கின்றனர். நபி(ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உமர்(ரழி) அவர்களுக்கு இவ்விதமே ஓதும்படி உபதேசித்ததாக ஒரு நபிமொழியில் காணப்படுகிறது, இதன் காரணமாகவே நபித்தோழர்களுடைய காலத்தில் திருக்குர்ஆன் ஏழு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. முதல் ஆறு அஹ்ஜாபு‘களும் முறையே மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று சசூராக்கள் அடங்கியவையாகவும், ஏழாவது அஹஜாபு‘‘ மீதியுள்ள சசூராக்கள் அடங்கியதாகவும் பிரிக்கப்பட்டு ஹிஸ்புல் முபஸ்ஸில்‘‘ என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஹிஸ்பும்‘ ஏறத்தாழ நான்கு அத்தியாயங்கள் உள்ளடங்கியவை யாகும். ஒவ்வொரு ஹிஸ்பையும் சுமார் இரண்டு மணி நேரத்தில் ஓதி முடிக்கலாம்.

இன்று காணப்படுவது போல் திருக்குர்ஆன் 30 (ஜு ஸு ) பகுதிகளா கவும் ஒவ்வொரு பகுதியும் ருகூ‘ எனும் சிறு தொகுதிகளாகவும் பிரிக்கப்பட்டது பிற்காலத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

உறுதியான ஈமானும், இறைஉணர்வும், உள்ள முஸ்லிம் ஒவ்வொருவரும் இந்த அளவு தினமும் ஓதி வரவேண்டும் கற்றறிந்தவராயினும் அல்லாதவராயினும் அவர்களின் இறை உண்ர்வு நிலை பெற

திருக்குர்ஆன் ஓதுவதையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும். சாதாரண மனிதனுக்கு திருக்குர்ஆன் ஓதுவது அல்லாஹ்வை நினைவுகூரச் செய்யும். அதுபோல் அவனுடைய கட்டளைகளை எச்சரிக்கவும் உதவும் கல்வியாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் அது அறிவுப் பெட்டகமாகவும் சிந்தனைக் கருவாகவும் அமையும். இரவு பகலாக திருக்குர்ஆனின் கருப்பொருளின் மீது ஆராய்ச்சி செய்வோரும், ஒவ்வொரு அத்தியாயத்தையும் வருடக் கணக்கில் ஆழ்ந்து சிந்திப்பவரும், இறைவசனங்களின் நுண்ணிய கருத்துக்களை அறியும் முகமாக இடையறாது முயற்சிப்பவரும் திருக்குர் ஆனை முறையாக ஓதாமல் தன் முயற்சியில் வெற்றி காணவியலாது. அவர்களின் உன்னத முயற்சிக்கு திருக்குர்ஆனை முறைப்படி ஓதி வருவது ஓர் உறுதுணையாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை உண்மையில் திருக்குர்ஆனை முறையாகத் தினமும் வழக்கமாக ஓதி வருவது சிந்தனைக்குக் கருவாகவும் பல பிரச்சினைகளுக்கு நிவாரணமாகவும் அமையும்.

இனிய நாதம்:

திருக்குர்ஆனை முறைப்படி ஓதத் தலைப்படுபவர், அதனைத் தம்மால் இயன்ற அளவு சீரிய வகையிலும் இனிய ஒலியுடனும் ஓத வேண்டியது மிக அவசியம். ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் இனிய நாதத்தை விரும்புகிறான். இனிய ஒலியை ரசித்து அதில் லயித்து மகிழ்ச்சியடைவது இயல்பாய் அமைந்துள்ளது. இஸ்லாம் மனித இயல்புக்கு உகந்த ஒரு மார்க்க நெறி, மனிதனுக்கு இயல்பாக அமைந்த மனப்போக்குகளை அடக்கி, ஒடுக்கி நசுக்காமல் அவற்றிற்கு (வரையறை விதித்து) நல்வழிப்படுத்துகிறது. அழகியவற்றைக் காணவேண்டும் இனியவற்றைச் செவிமடுக்க வேண்டும் என்பது மனித உள்ளத்தின் இயல்பு, எனவே தான் திருக்குர்ஆனை அழகிய வடிவில் அச்சிடுகின்றோம், இனிய ஒலியுடன் ஓத வேண்டும் என்று விரும்புகின்றோம். நபி (ஸல்) அவர்கள் “திருக்குர்ஆனை உங்களின் குரலினிமையால் அலங்கரியுங்கள்“ என்று கூறியுள்ளார்கள்.

மேலும் நபி(ஸல்) அவர்கள், இது சம்பந்தமாக நம்மிடையே கவனக்குறைவு, உதாசீனம் ஏற்படுவதைக் குறித்து எச்சரித்தும் உள்ளார்கள்.

எவன் ஒருவன் திருக்குர்ஆனை இனிய குரலில் ஒதவில்லையோ அவன் நம்மைச் சார்ந்தவனல்லன்“

மீண்டும் இனிய குரலில் திருக்குர்ஆனை ஓதும்படி ஊக்கமளிக்கும் வகையில் பின் வருமாறு கூறியுள்ளார்கள்:

திருக்குர்ஆன் இனிமையாக ஓதப்படும்போது செவிமடுத்துக் கேட்பது போல் வேறு எதையும் அல்லாஹ் கேட்பதில்லை“

நபி (ஸல்) அவர்கள் வீதியில் சென்று கொண்டிருக்கும் போது இனிமையான குரலில் திருக்குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்டால் அதனைக் கேட்டுக் கொண்டே அந்த இடத்திலேயே நின்று விடுவார்கள். அப்படி ஓதியவரை அழைத்துப் பாராட்டுவார்கள். சில சமயங்களில் தன் தோழர்களில் ஒருவரைத் தங்களுக்குத் திருக்குர்ஆனை ஓதிக் காட்டும்படி வேண்டுவார்கள். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களைத் திருக்குர்ஆனை ஓதிக் காட்டும்படி வேண்டினார்கள். இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் யாரசூலுல்லாஹ்! திருக்குர்ஆன் வழங்கப்பட்டதே தங்கள் மூலமே அப்படியிருக்க நான் எப்படித் தங்களுக்கு அதனை ஓதிக் காண்பிப்பது என வினவினார்கள். நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனைப் பிறர் ஓதிக் கேட்பதை நான் விரும்புகிறேன்“ என்று கூறினார்கள். பின்னர் இப்னு மஸ்ஊத்(ரழி) அவர்கள் ஓத ஆரம்பித்தார்கள். நபி(ஸல்) அவர்கள் அதனைக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்களின் கண்கள் நீரால் நிறைந்து கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. மற்றொரு சந்தர்ப்பத்தில் நபித் தோழர் ஒருவர், திருக்குர்ஆனை இனிய குரலில் ஓதுவதைச் செவி மடுத்த நபி (ஸல்) அவர்கள் தாவூது நபி(அலை) அவர்களின் ஆண் மக்களுக்கு

அருளப்பட்ட இனிய குரல் வளத்தில் ஒரு பங்கைத் தங்களுக்கும் அல்லாஹ் அருளியுள்ளான்" எனப் பாராட்டிக் கூறினார்கள். (நூல்: புஹாரி)

ஒருவர் திருக்குர்ஆனைத் தன்னால் இயன்ற அளவு இனிய குரலில் ஓத வேண்டும் அல்லாமல் திருக்குர்ஆன் ஓதுதல் திருப்திகரமாக அமையாது. எனினும் இதை அதிகமாக வலியுறுத்துவதில் சில சிரமங்களும் இல்லாமலில்லை. அல்லாஹ்வினால் அருளப்பட்ட இனிய குரல் வளத்தைப் பயன்படுத்தி விளம்பரத்திற்காகவும் பகட்டுக்காகவும் திருக்குர்ஆனை இனிமையான குரலில் ஓதுவதோ, அதனைத் தொழிலாகக் கொண்டு சம்பாதிப்பதோ முறையற்றதும் கண்டிக்கத் தக்கதுமான செயலாகும், இத்தகைய விரும்பத்தகாத செயல்களிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இனிய இசையை விரும்பிக் கேட்கும் நம் செவியுணர்ச்சி திருப்தியடைய திருக்குர்ஆன் இனிய ஒலியில் ஓதப்படுவதும் அதை விரும்பிக் கேட்பதும் விரும்பத்தக்கதே.

திருக்குர்ஆன் அதன் தூய தன்மைக்குரிய விதத்தில் சீரிய முறையில் ஓதப்பட வேண்டுமானால் சில நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இதயப்பூர்வமான உணர்வுடன் ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடியவாறு, இறைவனின் பெயரை மொழிந்து திருக்குர்ஆனை ஓத ஆரம்பிக்க வேண்டும். ஓதப்படும் வேத நூலின் மகத்துவத்தையும் அதனை இறக்கியருளிய அல்லாஹ்வின் வல்லமையையும் மனத்தில் இருத்தி, அதன் கருப்பொருளில் கவனம் செலுத்தி, சிந்தனையை ஒரு முகப்படுத்தி, அடக்கவொடுக்கத்தோடும் இறையுணர்வோடும் ஓத வேண்டும். திருக்குர்ஆனில் அடங்கியுள்ள உண்மைகளைக் கிரகித்து அதன் போதனைகளை ஏற்றுச் செயல்படும் தீர்மானத்துடன் ஓத வேண்டும், அதன் கருப்பொருளைப் பற்றிச் சதா சிந்திக்கவும் ஆராயவும் வேண்டும். இச்சிந்தனையும் ஆய்வும், தான் கொண்டுள்ள கொள்கைளுக்கும் தத்துவங்களுக்கும் திருக்குர்ஆனில் ஆதாரம் தேடுவதற்காக மேற்கொள்ளப்படாமல், யதார்த்த நேர்வழியை, சன்மார்க்கத்தைக் காணும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படவேண்டும். மேலே கூறியது போல் திலாவத்' என்பது ஒருவரைப் பின்பற்றி நடத்தல் அல்லது ஒழுகுதல்" எனப் பொருள் படும். எனவே திருக்குர்ஆனைத் திலாவத்' செய்யும்போது தன் மன இச்சைகளைக் களைந்து திருமறை தரும் போதனையை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையோடு ஓத வேண்டும்.

இம் மனப்பான்மையே திலாவத்' செய்வதன் சாராம்சமாகும்.

தர்த்தீல்: (நிதானமாக. இனிமையாக. ஆற அமர ஓதுதல்)

திருக்குர்ஆன் ஓதச் சிறந்த முன்மாதிரியான முறை யாதெனில், நடுநிசியில் அல்லாஹ்வின் முன், ™ தொழுகையில் கைகட்டித் தாழ்மையுடன், திறந்த மனத்துடன், நிதானமாகவும் பொறுமையாகவும், நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி, ஆசுவாசத்துடன் இதயத்தில் இறைமறையின் போதனைகள் ஆழப்பதியும் வண்ணம் ஓதுவதே ஆகும். இவ்விதம் ஓதுவதைத்தான் தர்த்தீல்' எனக் குறிப்பிடுகின்றோம். நபித்துவத்தின் ஆரம்பக் கட்டத்தில் நபி(ஸல்) அவர்களுக்கு இறைவன் கற்பித்த போதனைகளுள் திருக்குர்ஆனை இவ்விதம் ஓதும்படிக் கற்பித்ததே அதிமுக்கியமானதாக இருந்திருக்கலாம்.

போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பவரே! (நபியே) இரவில் நீர் (தொழுகைக்காக எழுந்து) நில்லும்: (முழு இரவிலுமல்ல அதிலொரு) சொற்ப பாகம்: (அதாவது) அதில் பாதி (நேரம்) அதில் நீர் சிறிது குறைத்துக் கொள்ளலாம்: அல்லது அதில் சிறிது கூட்டியும் கொள்ளலாம். (அதில்) இந்த குர்ஆனை நன்கு திருத்தமாக ஓதுவீராக" (அல்குர்ஆன் 73: 1,4)

திருக்குர்ஆனை நிதானமாகவும் கவனத்துடனும் குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி ஓதுவதுதான் திருமறை அருளப்பட்ட முறைக்கு உகந்ததாக அமையும். திருக்குர்ஆன் முழுவதுமாக ஒரே தடவையில் அல்லாமல் சிறிது சிறிதாக இடைவெளி விட்டு அருளப்பட்டது என்பதை நாம் அறிவோம். திருக்குர்ஆன் ஏன் ஒரே தடவையில் முழுவதுமாக அருளப்படவில்லை எனக் கேட்பவர்க்குப் பதில் கூறும் வகையில் புர்கான்" எனும் அத்தியாயத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: (அல்குர்ஆன் 25:32.)

இவ்வாறு நாம் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கி (இதனை வரிசைக் கிரமப்படி ஒழுங்கு படுத்தி)யதெல்லாம் உம் இதயத்தைத் திடப்படுத்துவதற்காகவே"

இதயத்தில் பதிந்துள்ள நம்பிக்கையைத் திடப்படுத்துவதற்கான சிறந்த வழி, நிறுத்தி நிதானமாக ஓதுவது தர்த்தீல்' தான் எனும் உண்மையை இது வலியுறுத்துகிறது. திருக்குர்ஆனை மேலே கூறியவாறு ஓதுவது மனித இதயத்திற்கு பெரும் நன்மை பயக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படி ஓதுவது அநேக சந்தர்ப்பங்களில் நம்மை மனம் நெகிழச் செய்து கண்ணீர் மல்கச் செய்து விடும் தர்த்தீல் என்றால் என்ன என்பதை விளக்கும்போது அஹ்காமுல் குர்ஆன்" எனும் நூலை எழுதிய அல்லாமா இப்னு அரபி அவர்கள் ஹஸன்(ரழி) அவர்களால் அறிவிக்கப்பட்ட கீழ்வரும் நபிமொழியை எடுத்துக் காட்டியுள்ளார்கள்:

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தம் வழியே நடந்து சென்று கொண்டிருக்கும்போது ஒருவர் திருக்குர்ஆனை ஒதிக்கொண்டிருப்பதை செவியுற்றார்கள், ஓதிக்கொண்டிருந்தவர் ஒவ்வொரு வசனத்தையும் நிதானமாக ஓதுவதும், ஒவ்வொரு வசனத்தின் இறுதியிலும் நிறுத்தி விட்டு அழுவதுமாக இருந்தார். அல்லாஹ்வின் ரசூல்(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் குர்ஆனை மெதுவாகவும் நிறுத்தி நிதானமாகவும் ஓதுவீராக" எனும் இறை ஆணையை நீங்கள் அறிவீர்களா? இதோ அதற்கு ஓர் எடுத்துக்காட்டு" என்று கூறினார்கள்."

நபி(ஸல்) இதைப்போல் கற்பித்த வேறொரு போதனையும் உண்டு. குர்ஆனை ஓதிவிட்டு அழுவீராக" (இப்னுமாஜா) நடுநசியில் நின்று தொழும்போது நபி(ஸல்) அவர்களின் நிலையும் மேலே கூறப்பட்டவைகளை நிரூபிக்கும் வண்ணமே அமைந்திருந்தது, என்று தான் நபி மொழி நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. நபி(ஸல்) அவர்கள் இரவுத் தொழுகையின் போது குர்ஆனை நிதானமாக நிறுத்தி, இறைவனுக்கு எதிரில் அவனோடு தொடர்பு கொண்ட வண்ணம் நிற்கின்றோம் என்ற உள்ளுணர்வோடு ஓதுவார்கள். அவர்கள் அப்படி ஓதும்போது உணர்ச்சி வசப்பட்டுக் கண்களில் நீர் வழிந்தோட அவர்களின் இதயத்திலிருந்து எழும் ஓசை வெந்நீர் காய்ச்சும் கொதிகலத்திலிருந்து வரும் ஓசையை ஒத்திருக்கும்"

திரு நபி(ஸல்) அவர்கள் ஓதியதைப்போல் நாமும் திருக்குர்ஆனை ஓத வேண்டுமானால் நாம் திருக்குர் ஆனை எவ்வளவு மனனம் செய்ய முடியுமோ அவ்வளவுக்கு மனனம் செய்தாக வேண்டும், நடுநிசியில் நின்று தொழும்போது நீண்ட நேரம் ஓதுவதற்காக திருக்குர்ஆனின் ஒரு பகுதியை மனனம் செய்யும் வழக்கம் இன்று நம்மிடம் குறைந்து வருகிறது, எனினும் திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்யும் வழக்கம் இன்னும் வழக்கில் உள்ள தென்பது ஒரளவு திருப்தியை அளிக்கிறது, இவ்விதம் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்வதற்குச் சிறு வயது முதலே பயிற்சி அளிக்க வேண்டியது அவசியம், அவ்வயதில் திருக்குர்ஆனை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு இல்லாமல் இருப்பினும் சரியே. இன்றையக் கால கட்டத்தில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்யும் வழக்கம் நம்மிடையே ஏழை எளியவர்களிடம் மட்டும்தான் நிலவி வருகிறது, அவர்களும் கூட திருக்குர்ஆனை மனனம் செய்து அதையே தம் தொழிலாகக் கொண்டு பிழைத்து வருகின்றனர். பல வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் பல நகரங்களில் திருக்குர் ஆனை மனனம் செய்த ஹாஃபிழ்' ஒருவரேனும் இல்லாத குடும்பம் ஒன்றைக்

காண்பது அரிதாக இருந்தது செல்வம் கொழிக்கும் குடும்பமாயினும் அல்லவாயினும் சரியே, குடும்பத்தில் ஒருவரேனும் ஹா.:பிழ்''ஆக இருப்பது வழக்கமாக இருந்தது. இன்றைய நிலை முற்றிலும் வேறாக உள்ளது. திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்வது உன்னதமான கண்ணியமிக்க காரியம் ஆகும். திருக்குர்ஆனைப் பாதுகாப்பதற்காக இறைவனால் வகுக்கப்பட்ட ஒரே வழி இது. எனவே திருக்குர்ஆனை மனனம் செய்வதை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் விரும்பிச் செயல்படுத்த வேண்டும். திருக்குர் ஆன் முழுவதையும் மனனம் செய்வது எல்லோருக்கும் சாத்தியமான காரியம் அல்ல. எனினும் திருக்குர்ஆனை ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற அளவு மனனம் செய்வது அத்தியாவசியம் ஆகும். தொழுகையில் நாம் இறைவன் முன் கைகட்டி நிற்கும் போது அதை ஓதியாக வேண்டும். ரசூல்(ஸல்) அவர்கள் ஓதியது போல் திருக்குர் ஆனை நாமும் சீராக ஓத வேண்டுமானால் நம்மால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு திருக்குர்ஆனை மனனம் செய்தாக வேண்டும்.

திருக்குர்ஆனை மனனம் செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் இன்று நம்மிடையே வெகுவாக மறைந்து விட்டது கவலைக்குரிய நிலை. மார்க்க அறிவு மிக்க மேதைகளும் கூட இப்பணியில் கவனக் குறைவாகவேயுள்ளனர், பள்ளிவாசல்களில் ஜமாத் கூட்டுத் தொழுகையை முன்னின்று நடத்தும் இமாம்களின் நிலையும் இத்தரத்திலேயேயுள்ளது: மற்றவர்களிலிருந்தும் மேம்பட்டுக் காணப்படவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் தாங்கள் என்றோ மனனம் செய்த திருக்குர்ஆனின் சில பகுதிகளே போதுமென நினைத்துத் திருப்தியடைந்து அவற்றையே தொழுகையில் திரும்பத் திரும்ப ஓதி வருகிறார்கள். நிச்சயமாக இது வருந்தத்தக்க ஒரு நிலையே! இந்நிலை மாற வேண்டும் மாற்றப்பட வேண்டும், நாம் யாவரும் சிறப்பும் மகத்துவமும் மிக்க திருக்குர்ஆனை அதற்குரிய விதத்தில் நேசிக்க வேண்டும், திருக்குர்ஆனிலிருந்து நாம் மனன செய்து கொண்டுள்ளவற்றையே நாம் ஈட்டிய விலை மதிப்பு மிக்க சொத்துக்கள் எனெக் கருதி அவற்றை அதிகப்படுத்திக் கொள்ளவும், விருத்தி செய்து கொள்ளவும் இடையறாது உழைக்க வேண்டும். இத்தகைய மனப்பான்மையோடு நாம் திருக்குர்ஆனை தர்த்தீல்ம் செய்யும்போது மனம் மகிழ்வோம் அதனால் உள்ளம் மென்மேலும் ஊக்கமும் ஊட்டமும் பெறும்.

1. இவ்விரு வார்த்தைகளுக்கும் முறையே நல்லறிவு புகட்டுதல்' (நயமான கண்டிப்பு, சிந்தனை தரும் விளக்கம் என்பது பொருள். திருக்குர் ஆனில் மிக முக்கியம் வாய்ந்த சொற்கள் இவை. எனவே அடைப்புக் குறிக்குள் தலைப்பின் விளக்கம் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

மனிதன் உள்ளுணர்வால் அறிந்து கொள்ளக்கூடிய அடிப்படை உண்மைகளை திருக்குர்ஆன் வாயிலாக நினைவுபடுத்தி அவற்றின் கருத்துக்களைக் குறித்துச் சிந்தித்தல்.

நாம் இதுவரை திருக்குர்ஆன் மீது நமக்குரிய கடப்பாடுகளில் இரண்டைக் குறித்து விவரித்தோம். அவை:- 1. நாம் திருக்குர்ஆன்மீது நம்பிக்கை (ஈமான்) கொள்ள வேண்டும் 2. நாம் அதனை முறையோடு பதிவாக (வழக்கமாக) ஓதி வரவேண்டும்.

இங்கே மூன்றாவது கடமையைக் குறித்து விவரிப்போம்: நாம் திருக்குர்ஆனின் கருப்பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அது. நாம் திருக்குர்ஆனின் கருப்பொருளை விளங்கிக் கொள்ளாமல் அதன் மீது நம்பிக்கை (ஈமான்) கொள்வதால் பலன் இல்லை. அதன் கருப்பொருளைக் கிரகிக்கத் தவறிவிட்டோமேயானால் அது எப்படி நமக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ முடியும்? அதன் கருப்பொருளை விளங்கிக் கொள்ளாமல் வெறுமனே ஓதுதல், கல்வியறிவில்லாதவர்களையும் வயது முதிர்ந்தவர்களையும் பொறுத்த மட்டில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கலாம். இத்தகையவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தப்பும் தவறுமாகத் திருகுர்ஆனை ஓதினாலும் அல்லாஹ் அதனை ஏற்று அதற்கான கூலியையும் கொடுத்தருளலாம். திருக்குர் ஆனை ஓத அறியாத

ஒருவர், திருக்குர்ஆன் மீது தான் கொண்டுள்ள பாசத்தாலும் ஈடுபாட்டாலும் திருக்குர்ஆனின் எழுத்துக்களின் மீது, அவை அல்லாஹ்வின் திருமொழிகள் என்ற உள்ளுணர்வோடும் அச்சத்தோடும் தன் விரல்களை வருடினாலும் கூட எல்லாம் வல்ல அல்லாஹு அவர்களுக்கு அதன் பொருட்டு கருணை காட்டி நல்லருள் பாலிக்கலாம்.

ஆனால் தம்முடைய வாழ்நாளில் கணிசமான ஒரு பகுதியைக் கல்வி பயிலுவதில் கழித்து பல கலைகளையும் அறிவியல்களையும் பிற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தவர்கள், திருக்குர்ஆனின் கருப்பொருளைப் புரிந்து கொள்ள முயலாமல் சிரத்தையின்றி வெறுமனே எழுத்துக்களைப் பார்த்து ஓதுவதால் எவ்விதப் பலனும் பெறுவதில்லை் வீண் விரயம் அது, அது மாத்திரமல்லாமல் சிரத்தையும் தக்க கவனமுமின்றித் திருக்குர்ஆனை ஓதுவதால் கற்றறிந்தவர்கள். குர்ஆனை நையாண்டி செய்த குற்றத்திற்கும் ஆளாக நேரிடும். எனவே கல்வியறிவு உள்ளவர்கள் திருக்குர்ஆனைச் சாதாரணமாக ஓதுவதுடன் மாத்திரம் திருப்தியடைந்து விடாமல் அதனைச் செவ்வனே கற்று அறிய வேண்டும் என்ற உறுதியான தீர்மானம் கொள்ள வேண்டும், அதற்காக முயற்சி செய்து கொண்டே திருக்குர்ஆனைத் தம்மால் இயன்ற அளவு அறிந்த விதத்தில் தொடர்ந்து ஓதிக் கொண்டிருக்க வேண்டும், இவ்விதம் உயர்ந்த எண்ணத்தோடு முயற்சியும் செயலும் இணையும் வகையில் திருக்குர்ஆனை ஓதும்போது. குறைகளும் தவறுகளும் ஏற்பட்டாலும் அவை மன்னிக்கப்பட்டு அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்படும் அதற்குரிய பலனையும் அல்லாஹ் தந்தருள அது உதவலாம்.

அவரவரின் சிந்தனையாற்றலுக்கும் முயற்சிக்கும் ஏற்ப ஒவ்வொருவரும் பெறும் அறிவுத் திறன் வேறுபடுகின்றது. திருக்குர்ஆன் கரை காணமுடியாத ஒரு கடல் போன்றது் அவரவருக்கு இயற்கையாய் அமைந்த ஆற்றல். சிந்தனைத்திறன், மனோபாவம் இவற்றிற்கு ஏற்ப ஒருவர் அக்கடலிலிருந்து அறிவு எனும் முத்துக்களைக் கண்டெடுக்கலாம், திருக்குர்ஆனின் கருப்பொருளைக் கிரகிக்க ஒருவர் மேற்கொள்ளும் முயற்சி, அதனைக் கற்றுக்கொள்ளவும் ஆராயவும் அவர் கொண்டுள்ள ஆர்வம், அதற்காக அவர் செலவிடும் நேரம், மேற்கொண்ட உழைப்பு, ஆகியவற்றின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ப அவருக்குப் பலன் கிட்டும். ஆனாலும் ஓர் உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. எத்துணைதான் அறிவாற்றலும் சிந்தனைத்திறனும் உள்ளவரானாலும் அவர்தம் ஆயுட்காலம் முழுவதையும் திருக்குர்ஆனைப் பக்கம் பக்கமாக ஊன்றி வாசிப்பதிலும், அதன் கருத்துக்களைச் சிந்தித்து ஆராய்வதிலும் கழித்தாலும் திருக்குர்ஆனை முற்றிலும் அறிந்த திருப்தி ஏற்படாது: முற்றிலும் அறிந்து கொள்வது சாத்தியமுமல்ல. பெருமானார்(ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை வற்றாத (அறிவும் விவேகமும் நிறைந்த) கருவூலம் என வர்ணித்துள்ளார்கள். அலி(ரழி) அவர்கள், நபி(ஸல்) அவர்கள் திருக்குர்ஆனைப் பற்றிக் கீழ்வருமாறு அறிவித்ததாகத் தெரிவித்துள்ளார்கள். திருக்குர் ஆனை எவ்வளவு அதிகமாக ஓதினாலும் அறிஞர்கள் திருப்தியடையமாட்டார்கள்: திரும்பத் திரும்ப ஓதினாலும் அவர்களின் ஆர்வம் குன்றிவிடாது: அதன்மூலம் கிடைக்கும் அற்புதமான கருத்துக்களும் வற்றாது. திருக்குர்ஆனை ஓதுவதால் மீண்டும் மீண்டும் அறிவும் ஞானமும் விருத்தி ஆகிக் கொண்டிருக்கும்

2. ஃபஹ்ம், அக்வ், ஃபிக்ஹ் ஆகிய மூன்று எழுத்துக்களும் கிட்டத்தட்ட புரிந்து கொள்ளுதல்“ எனும் பொருள் கொண்டவை. ஃபிக்ர் எனும் சொல் சிந்தித்தல்“ எனப் பொருள்படும்.

3. திக்ர், திக்ராஇ ததிக்ரா ஆகிய மூன்று சொற்களும் ஒரே வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தவை: சிறிதே வேறுபடும் பொருட்களைக் கொண்டவை. முறையே நினைவு கூர்தல்‘, எச்சரித்தல்‘, நல்லறிவு புகட்டல்‘ (நயமாகக் கண்டித்தல்) எனப் பொருள்படும்.

4. திருக்குர்ஆனில் அதன் வசனங்கள் ஆயத்‘ (இறைவனின் அத்தாட்சிகள்) என அழைக்கப்படுகின்றன. இந்தப் பிரபஞ்சத்திலும் மனித இதயங்களிலும் இறைவனை நினைவூட்டுகின்ற அத்தாட்சிகளைப்

போன்றது திருக்குர்ஆனின் வசனங்களாகும். இறைவனைப் பற்றிய அத்தாட்சிகளாகும். திருமறை வசனங்கள் யாவும் இறைவனின் வாக்குகள்: மற்ற அத்தாட்சிகளைப் போல அவையும் மனித இதயங்களை இறைவனின் பால் ஈர்க்க வல்லவை.

எப்பொழுதும் அதையே புகலிடமாகக் கொண்டு அதைப்பற்றியே சிந்திக்கும் அத்தியாவசியத்தை மனிதன் உணரும்படிச் செய்யும் வல்லமை பெற்ற ஒரு மகத்துவமிக்க வழிகாட்டி திருக்குர்ஆன்.

எனவே (அதற்காக) ஆர்வம் கொள்பவர்கள் ஆர்வம் கொள்ளட்டும்“. (83.26) எனவே தைரியமும் உறுதியும் வாய்ந்தவர்களே! மற்றவர்களை விடத் தாம் இத்துறையில் மேம்பட்டுத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு திருக்குர்ஆனின் கருப்பொருளை ஆராயும் மகத்தான பணியில் ஈடுபட முன்வாருங்கள்.

திருக்குர்ஆனைக் கவனத்துடன் ஊன்றி மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டும். வாசித்தவை பற்றிச் சிந்தித்து, அவை போதிப்பவற்றிற்கு ஏற்ப நம் எண்ணங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்: திருக்குர்ஆனில் காணப் பெறும் உண்மைகளைப் புரிந்து கொள்வதற்காகச் சிந்தனை ஆற்றலையும் பகுத்தறிவையும் பிரயோகிக்க வேண்டும். இதைத் திருக்குர்ஆனே வலியுறுத்துகிறது, இதை வலியுறுத்துவற்காகத் திருக்குர் ஆனில் கையாளப்பட்டுள்ள சொற்கள் :- என்பவனாகும். இதே ரீதியில் திருக்குர்ஆனில் அடிக்கடி வரும் இன்னொரு சொல் அராபிக் ஆகும் திருக்குர்ஆன் (திக்ரு) (தக்கிரா)‘ (ததிக்கிரா)‘ எனும் பெயர்களாலும் தன்னை அறிமுகப்படுத்துகிறது என்ற உண்மையை உணர்ந்து கொண்டால் இச்சொற்களின் முக்கியத்துவம் விளங்கும், யதார்த்தத்தில் (நினைவு கூரல் அல்லது நினவூட்டல்) என்பது திருக்குர்ஆனைப் புரிந்து கொள்ள மேற்கொள்ளப்படும் செயல்களின் முதற்கட்டம், ஆகும். எந்தக் காரியத்தைச் சாதிக்க அது மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதையே அது சுட்டிக்காட்டவும் செய்கிறது, உண்மையில் மனிதனின் உள்ளுணர்வுகளையே அது நினைவூட்டுகிறது, இயல்பாக மனிதனுடைய இதயத்தில் உறைந்து கிடக்கும் கருத்துக்களை இது நினவூட்டுகிறதே அல்லாமல் புதிய கருத்துக்களைப் புகுத்தவில்லை. சுருங்கக் கூறின் மனித சுபாவம் நிலை நிறுத்தப்படுவதற்கே இது உதவுகிறது, சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனிதர்களைத், திருக்குர்ஆன் (விளங்கிக் கொள்ளும் ஆற்றலுள்ள மனிதர்களே) என்றும் (புரிந்து கொள்ளும் மக்களே) என்றும் அழைத்து, அல்லாஹ்வின் அத்தாட்சிகள் நிரம்பியுள்ள புறவுலகைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் சிந்திக்கும்படிக் கோருகிறது. அதே சமயம் தன்னகத்தே அடங்கியுள்ள இறைவசனங்களைப் பற்றிச் சிந்திக்கும் படியும் தூண்டுகிறது. இன்னும் அத்தியாயத்தில் இவ்வாறு கூறுகிறது. (அல்குர்ஆன் 10:14)

சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு நாம் (நம்முடைய) வசனங்களை இவ்வாறு (தெளிவாக) விவரிக்கின்றோம். “

மேலும் நஹ்ல்‘ எனும் அத்தியாயத்தில், (அல்குர்ஆன் 16:14)

அவ்வாறே இந்தத் திருக்குர்ஆனையும் (நபியே!) உமக்கு நாம் அருளினோம். மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதனை. நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும் (இதன் மூலம்) அவர்கள் சிந்தித்துக் கொள்வார்கள்“ என்றும் கூறப்பட்டுள்ளது.

இதே ரீதியில் அல்பக்ரா‘ எனும் அத்தியாயத்தில் (அல்குர்ஆன் 2:242)

நீங்கள் விளங்கிக் கொள்ளும் பொருட்டு, தன்னுடைய வசனங்களை அல்லாஹ் உங்களுக்கு இவ்வாறு தெளிவாக விவரிக்கின்றான்“ என்றும் கூறுகிறது. அதே போல் ஃசுஃப்“ எனும் அத்தியாயத்தின் தொடக்கத்தில், கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது:

நீங்கள் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு குர்ஆன் என்னும் இவ்வேதத்தை நிச்சயமாக நாமே அரபி மொழியில் இறக்கி வைத்தோம்.

இம்மூன்று அத்தாட்சிகளையும் சிந்தித்தால் நாம் (1, திருக்குர்ஆனின் வசனங்கள்: 2. வெளியுலகில் காணப்பெறும் ஆதாரங்கள் 3. மனிதனின் மனத்தில் தோன்றும் இறையுணர்வு) ஆகியவற்றிற்கிடையே ஓர் இணக்கத்தைக் (ஒற்றுமையை) காண்போம் இந்த இணக்கத்தை உணர்ந்ததும், இயற்கையாக நம்மிடம் காணப்படுகின்ற இயல்புகளை (குணங்களை) ஒட்டியே அடிப்படைக் கோட்பாடுகள் யாவும் அமைந்துள்ளன என்பது உணரப்படும், ஆக, திருக்குர்ஆனின் இறைவசனங்கள் நல்ல போதனைகளாக அமைந்து. இதயத்தின் ஆழத்தில் உறங்கிக் கிடந்த உண்ர்ச்சிகளைத் தட்டி எழுப்பி நம்பிக்கையின் (ஈமானின்) கருவாகிய ஏக இறைவனை முழுமையாகவும் உறுதியாகவும் அறிந்து கொள்ள உதவுகின்றன. இத்தகைய இயல்பான நிகழ்ச்சியைத் திருக்குர்ஆன் (நினைவுகூரல்) அல்லது நினைவூட்டுதல் என்னும் வார்த்தையால் குறிப்பிடுகிறது.

சாதாரணமானவர்களானாலும் அறிவாற்றல் மிக்கவர்களானாலும் மறந்துபோன உண்மைகளை நினைவுபடுத்தவும் உண்மைகளை மறக்காதிருக்கவும் 1தக்ர் எனும் சொல்லின் நேரான பொருள் நினைவுபடுத்துதல்' ஆகும். திருக்குர்ஆனில் அது, மறந்து போன உண்மைகளை ஞாபகமூட்டுதல்' எனும் பொருள்பட பிரயோகிக்கப் பட்டுள்ளது. மிக இன்றியமையாதது. இறைவன் இக்காரணத்திற்காகவே திருக்குர்ஆனை நினைவுபடுத்துவதற்கு எளிதாக அமைத்துள்ளான். இவ்வுண்மை ஒரே சகூராவில் (அத்தியாயத்தில்) நான்கு தடவை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (அல்குர்ஆன்54:32)

நினைவுப்படுத்துவதற்குத் தோதுவாக இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக எளிதாக ஆக்கி இருக்கின்றோம் ஆகவே (இதனை) நினைவு கூருகின்றவர்கள் எவரும் உண்டோ?"

நினைவுகூர்தல் (சிந்தித்தல்) மூலம் ஒவ்வொரு மனிதனும் திருக்குர்ஆன் வாயிலாக நன்மை பெற முடியும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகத் திருமறையே எடுத்துக் கூறுகிறது.

ஒருவருடைய அறிவாற்றல் குறைவாக இருந்தாலும் அவர் நேர்மையாளராகவும், சபலமற்ற பண்பாளராகவும். அப்பழுக்கற்ற ஒழுக்கமுடையவராகவும் இருந்தால் நினைவு கூர்வது மூலம் நிச்சயமாக அவர் நன்மை அடைவார். திருக்குர் ஆனை வாசிக்க வேண்டும்: அதன் பொருளைச் சாதாரண நிலையில் விளங்கிக் கொள்ள வேண்டும், இவ்விரண்டும் அவருக்கு நினைவு கூர நினைவுபடுத்த - சிந்திக்க போதுமானவை.

திருக்குர்ஆனை விளங்கி நினைவு படுத்த - அதனைப்பற்றிச் சிந்திக்க விழைவோருக்குப் பலவழிகளிலும் எளிதாக இருக்கும் முறையிலேயே அது அமையப் பெற்றுள்ளது. முதற்கண், திருக்குர்ஆனின் கருப்பொருளும், அதில் விவரிக்கப்படும் கோட்பாடுகளும் மனித இயல்புக்குப் புறம்பானதோ. பரிச்சயமில்லாதவையோ அல்ல. ஒருவர் திருக்குர்ஆனை ஓதும்போது அநேக சந்தர்ப்பங்களில் தன் உள்ளுணர்வுகளே அதில் பிரதிபலிப்பதாக உணருவார்.

இரண்டாவதாக, அதன் போதனை முறை எளிதாகவும் இயல்பாகவும் அமைந்துள்ளதோடு, புரிந்து கொள்வதற்குக் கடினமான ஆழ்ந்த கருத்துக்கள் எளிய சாதாரண வரலாறுகள் மூலம் இலகுவாக விளக்கப்பட்டுள்ளன மூன்றாவதாக, திருக்குர்ஆன் ஒப்புயர்வற்ற தலைசிறந்த இலக்கியமாகவும். சொல்வன்மை மிக்கதாகவும் விளங்கினாலும் அதன் மொழி எளிதாகவும், அரபி மொழியைத் திக்கித் திக்கி வாசிப்பவரும்கூட சில கடினமானப் பகுதிகளைத் தவிர மற்றெல்லாவற்றையும் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. இவையாவும் உண்மையாயினும் திருக்குர் ஆனின் போதனைகளை நினைவுகூர - சிந்திக்க அரபி மொழியில் அடிப்படை அறிவு அவசியம். அரபியில் வாசித்துக் கொண்டு

அதன் மொழிபெயர்ப்பைக் கவனித்துப் புரிந்து கொள்ள முயல்வதோடு திருப்தி அடைவது மெச்சத் தக்கதல்ல. திருக்குர்ஆனை வாசிக்கும் போது மொழி பெயர்ப்புகளை நோக்க வேண்டிய அவசியம் இன்றிச் சாதாரண கருத்தைத்தாமே புரிந்து கொள்ளும் அளவிற்கேனும் அரபிமொழியைக் கற்றறிவது முஸ்லிம் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். கல்வி கற்றதோடு பட்டதாரி ஆகி மேலும் உயர் பட்டமும் பெற்று மருத்துவம், பொறியியல் போன்ற அறிவியல்களில் வல்லமையும் ஆழ்ந்த அறிவும் பெற்ற முஸ்லிம்கள் திருமறையைப் புரிந்து கொள்ளப் போதுமான அளவேனும் அரபியைக் கற்றுக் கொள்ளாதிருந்தால் நாளை மறுமையில் (மஹ்ஷரில்) அல்லாஹ்வின் முன்னிலையில் என்ன காரணம் கூறுவார்கள்? முஸ்லிம் சகோதர சகோதரிகளிடத்துக் கொண்டுள்ள உண்மையான மதிப்பும் தூய கரிசனமும் (அக்கறையும்) காரணமாக அரபி மொழி கற்பதில் அவர்கள் காட்டும் அசிரத்தை, கவனக் குறைவு அல்லாஹ்வின் திருமறையை ஏளனம் செய்வதற்கும் அந்தப் புனித வேதத்தை அவமதிப்பதற்கும் ஒப்பாகும்.

இத்தகைய பொறுப்பும் கடமையுணச்சியுமில்லாத மனப்பான்மையால், அல்லாஹ்வின் கடுங்கோபத்திற்கும் பயங்கர வேதனையோடு கூடிய தண்டனைக்கும் நம்மை நாமே உள்ளாக்கிக் கொள்கிறோம். என்பதை உணரவேண்டும். திருக்குர்ஆனின் கருப்பொருளை எளிதாகப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அரபி மொழியைக் கற்பது கற்றறிந்த முஸ்லிம்கள் யாவர்மீதும் திருமறை சுமத்தும் பொறுப்பாகும் இக்கடமையை நிறைவேற்றாமல் இருப்பது திருமறைக்கும் நமக்கும் நாமே இழைத்துக் கொள்ளும் கொடுமையாகும்.

திருக்குர்ஆனைக் கற்று கிரகித்துக் கொள்ள மேற்கொள்ளும் செயல்களில் இரண்டாவது நிலை திருக்குர்ஆனின் கருப்பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது ஆகும். திருக்குர்ஆன் போதிக்கும் உண்மைகளையும் ஞானத்தையும் பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஆய்வு செய்ய வேண்டும். திருக்குர்ஆன் மனிதர்களுக்கு நேர்வழி காட்டி (அராபிக்) யாக இருப்பதால் அதனை ஆழ்ந்து ஆய்வது அவசியமாகிறது. அல்லாஹ்வின் உண்மையான யதார்த்தப் பண்புகளை எடுத்துரைத்தும் இப்பிரபஞ்சத்தின் தன்மைகளை விளக்கியும் சீரிய ஒழுக்க நெறியை வகுத்துத் தந்தும் சாதாரண மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதோடு திருக்குர்ஆனைக் கிரகிக்கும் ஆற்றல் படைத்த கல்வியாளர்களுக்கு அவர்கள் தம் வாழ்க்கையில் எதிர்படும், இறைவழிபாடு மற்றும் அறிவியல் பற்றிய பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காட்டும் கலங்கரைவிளக்கமாகவும் திகழ்கிறது.

திருக்குர்ஆன் நினைவு கூர்வதற்கும் சிந்திப்பதற்கும் உரிய வேதநூல் என்னும் உண்மையை திருமறையே வலியுறுத்துகிறது. (அல்குர்ஆன் 28:29.)

(நபியே!) அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆராய்வதற்காகவும் (அதைக் கொண்டு) அறிவுடையோர் நினைவு கூர்வதற்காகவும் மிக்க பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை நாமே உம்மீது அருளினோம்“

இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில். எச்சரிக்கும் தொனியில் அந்நிஸாம் எனும் அத்தியாயத்தில். (அல்குர்ஆன் 4:82)

இந்த குர்ஆனை அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? என்றும் முஹம்மது எனும் அத்தியாயத்தில் (அல்குர்ஆன் 47:24)

அவர்கள் இந்த குர்ஆனை ஆராய்ந்து பார்கக வேண்டாமா? அல்லது (அவர்களுடைய) இதயங்கள் தாளிடப்பட்டுவிட்டனவா? என்றும் கூறுகிறது,

திருக்குர்ஆனை நினைவுகூர எவ்வளவுக் கெவ்வளவு எளிதாகவுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்க (ஆராய) கடினமாக அமைந்துள்ளது. திருக்குர் ஆன் எனும் ஆழ்கடலில் மூழ்குபவர்களுக்குத்தான் அதன் ஆழத்தை நிர்ணயிப்பது சாத்தியமல்லவென்பது தெரிய வரும். நபி பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்கள். திருக்குர்ஆனின் அத்தியாயங்கள் (சூராக்கள்) ஒவ்வொன்றையும் வருடக்கணக்கில் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள் என்பது ஆதாரபூர்வமான நபிமொழிகள் மூலம் தெரியவரும் உண்மை.

அப்துல்லாஹ் பின் உமர்(ரழி) அவர்கள் அல்பகரா எனும் அத்தியாயத்தைப் பற்றி எட்டு வருட காலம் ஆய்வு நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது, குர்ஆன் அருளப்பட்ட மொழியாகிய அரபியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் நபி(ஸல்) அவர்களின் தோழர்கள் என்ற நிலையில் நபி(ஸல்)அவர்களுடனேயே இருந்து திருக்குர்ஆன் அருளப்பட்டதை நேரிலேயே கண்டும் கேட்டும், அறிந்தவர்களுமான நபித்தோழர்களின் நிலையே இத்தகையதெனில் மற்றவர்களின் நிலைபற்றிக் கூறவும் வேண்டுமா?

அரபிமொழியைக் கற்றுத்தான் அறிய வேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கு இல்லாமலிருந்தது: அதன் இலக்கணத்தைதைப் பயில வேண்டும் என்பதும் தேவையில்லாமல் இருந்தது: ஒவ்வொரு அத்தியாயமும் அல்லது வசனமும் (ஆயத்தும்) அருளப்பட்ட காரணத்தையும், சூழ்நிலையையும், பின்னணியையும், காலத்தையும் அறிந்து கொள்ள ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தேவை இல்லாமலிருந்தது, இத்தகைய சாதகமான அம்சங்கள் எல்லாம் இருந்தும் நபித்தோழர் பெருமக்கள் ஒவ்வொரு அத்தியாயம் பற்றியும் வருடக் கணக்கில் ஆராய்ந்தார்கள் என்றால். இவ்வறிவுக்கடலில் மூழ்குவது வெறும் கேளிக்கை அல்ல் மாறாக திருக்குர் ஆனை ஆராய்ந்திடக் கடும் முயற்சியும் அயராத உழைப்பும் அவசியம் என்பது உறுதியாகிறது,

நபித்தோழர்களுக்குப் பின்னர் தபரீ, ஸமக் ஷரி, ராஸீ போன்ற மார்க்க அறிஞர்கள் பலர் தம் வாழ்நாளை எல்லாம் திருக்குர்ஆனை ஆராய்வதிலேயே கழித்தும் இம்மகத்தான வேத நூலின் ஏதேனும் ஒர் அம்சத்திற்கே பொருள் விளக்கம் தர முடிந்தது: உண்மையில் அந்தப்பணியும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றே கூறப்படவேண்டும். ஹிஜ்ரி பதினான்காம் நூற்றாண்டில் குர்ஆன் முழுவதற்கும் பல ஏடுகளில் அடங்கும் வண்ணம் விரிவுரை எழுதிய அறிஞர்களில் யாருமே அவர்கள் மேற்கொண்டதற்கு மேல் ஆய்வுக்கு இடமில்லை என்று கூற முன்வரவில்லை.

இமாம் கஸ்ஸாஸி (ரஹ்) அவர்கள், இஹ்யாவுல் உலூமுத்தீன்' எனும் நூலில் குர்ஆனை ஓதும் விதம் ஓதுபவரின் நோக்கத்தையும் குறிக்கோளையும் பொருத்து வேறுபடுகின்றது எப்படி என்பதை எடுத்துக் காட்டும் முகமாக அறிஞர் ஒருவர் கூறியதை எடுத்து எழுதியுள்ளார். அம்மேதை கூறுவதாவது: குர்ஆன் முழுவதையும் ஒரே வாரத்தில் நான் ஓதி முடிக்கும் ஒரு முறையும் உண்டு: இன்னொரு விதத்தில் ஓதினால் ஒரு மாதமும் பிறிதொரு விதத்தில் ஓதினால் ஒரு வருடமும் கூட ஆகும். இவற்றை எல்லாம் விட வேறொரு முறையும் உள்ளது. அந்த முறையில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் குர்ஆனை ஓதத்தொடங்கினேன். ஆனால் இன்னும் ஓதி முடிக்க முடியவில்லை"

ஆராய்ந்து அறியும் நோக்கத்துடன் திருக்குர்ஆனைக் கற்பதற்குத் தேவையான தகுதிகள் கைவரப் பெறுவது சுலபமல்ல. குர்ஆனைக் கற்பதும் கற்பிப்பதும்தான் வாழ்க்கையில் எல்லாமே என்று கருதித் தன்னை முழுமையாக அர்ப்பணித்தால் மாத்திரமே இத் தகுதிகள் கைகூடி வரும். இத்தகைய ஆய்வுப்பணிக்கு அழகிய செறிந்த நயமுடைய இலக்கியங்களை வாசித்துப் பண்பட்ட இலக்கிய நயமும் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்திய கவிஞர்கள் பேச்சாளர்கள் முதலியோரின் ஆக்கங்களைப் படித்து அறிந்து திருக்குர்ஆன் அருளப்பட்ட அரபிமொழியில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

இவையல்லாமல் குர்ஆனில் கையாளப்படும் சொற்றொடர்கள், மொழி நடை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றலும் வேண்டும். திருக்குர்ஆனை நெடுங்காலமாக ஊன்றி வாசித்தால் மட்டும் இது சாத்தியமாகும். திருக்குர்ஆனைப் பற்றி ஆய்வு நடத்த இவையாவும் அவசியமானவை.

மேலும் திருக்குர்ஆனில் கூறப்படும் ஒத்த தரமுள்ள விஷயங்கள் (ஓர் இடத்தில் சொல்லப்பபட்டுள்ளதற்கும் பிறிதொரு இடத்தில் சொல்லப்படுவதற்குமுள்ள சம்பந்தம்) மற்றும் முரண்பாடின்மை ஆகியவற்றை உணர்ந்து கிரகிக்கும் தன்மையும் வேண்டும். அத்தியாயங்கள் (சகூராக்கள்) அருளப்பட்ட காலக்கிரம வரிசையில்லாமல் இன்று திருக்குர்ஆனில் காணப்படுவது போல் அவை தொகுக்கப்பட்டதற்கான முக்கியத்துவத்தை உணர்ந்திருத்தல் அவசியம். ஒரு சகூராவிற்கும் மற்றொன்றிற்கும் அதேபோல் ஒரே அத்தியாயத்தில் (சகூராவில்) உள்ள ஒரு வசனத்திற்கும் பிறிதொரு வசனத்திற்கும் உள்ள கருத்துத் தொடர்புகளைக் கிரகிக்கும் ஆற்றல் வேண்டும். இது உறுதிமிக்க அறிஞர்களின் பொறுமையையே சோதிக்கக் கூடிய கடினமிக்க ஒரு பணி என்றாலும் திருக்குர் ஆனின் கருப்பொருளைக் கிரகிக்க மேற்கூறியவற்றில் திறமை பெற்றிருப்பது மிகமிக அவசியம். திருக்குர்ஆனின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள தொடர்பை (சம்பந்தத்தை)ப் புரிந்து கொள்வதற்காக அதில் ஆழ முழ்கும் போதுதான் இவ்வறிவுக் கடலின் ஆழம் நிர்ணயிக்க முடியாதது என்ற உண்மையை உணர முடியும்: ஞானமும் விவேகமும் நிறைந்த நேர்த்தியான முத்தான கருத்துக்களை அதிலிருந்து கண்டெடுத்து வெளிக் கொண்டு வர முடியும்.

மேலே கூறியவை அல்லாமல் நபிமொழிகளிலும் முன்னைய வேத நூல்களிலும் தேர்ச்சி, பெறுதல் மிக அவசியமாகும், திருமறையைச் செவ்வனே கற்று ஆராய விரும்புகின்றவர் இத்தகைய தரமிக்க அறிவு பெற்றிருக்க வேண்டும், இவை யாவற்றுடனும், திருமறை ஆய்வுப்பணிக்குத் தேவையானவை இன்னும் உள்ளன. நவீன அறிவியல் (MODERN SCIENCE) பற்றிய ஞானமும் மிக அவசியம். கொள்கையளவானவையும். அனுபவரீதியானவையுமான அறிவியல் ஞானம் வளராமல் ஒரே நிலையில் நிலைத்திருப்பதில்லை. காலச் சுழற்சியோடு வளர்ந்து கொண்டே இருக்கும்: மாறுபட்டுக் கொண்டும் இருக்கும். குர்ஆனை ஆய்ந்தறிய விரும்பி சிறப்பு வாய்ந்த அப்பணியில் ஈடுபடும் அறிவுடையோர் இயற்பியல் (Physics) உயிரியல் (Biology) சமூகவியல் (Socialogy) இன்ன பிற நவீன அறிவியல் துறைகளில் நல்ல தெளிவு பெற்றிருத்தல் அவசியம்.

குறிப்பாக, வேறுபட்ட பல அறிவியல் துறைகளில் அடிப்படை விளக்கக் கோட்பாடுகளைப் பற்றியும் அவை கையாளும் அனுமானங்கள், கண்ட முடிவுகள் யாவற்றைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். மனிதன் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளின் நோக்கமும் அவற்றின் விளைவு பற்றிய அறிவும் இப்பணிக்குத் தேவை. இன்றைய கலை, அறிவியல் குறித்த அறிவு அவருக்குத் தேவைப்படும் மனப்பக்குவத்தையும் அறிவாற்றலையும் விசாலமடையச் செய்யும்.

இத்தகைய தகுதிகளைக் கைவரப் பெற்றவராகி குர்ஆனைக் கற்று ஆராயும் மகத்தான பணியை மேற்கொள்ள வேண்டும். குர்ஆன் எனப்படும் கரை காண முடியாத பெருங்கடலில் ஒருவர் அவருக்கு வாய்க்கப் பெற்றுள்ள திறமைகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட தொலைவிலேயே சிந்தனையில் சஞ்சரிக்க முடியும். அவருக்கு வாய்த்த ஞானம், ஆழிய சிந்தை, இவை காட்டும் நெறிக்கேற்ப உண்மைகளைக் கண்டெடுக்க முடியும்.

இன்றையக் காலகட்டத்தில் நம்மீது சுமத்தப்பட்டுள்ள கடமையை ஒட்டி திருமறையைப் போதிக்கவும். அதன் உண்மையைப் பரப்பவும் அறிவியல் ஞானம் இன்றியமையாததாகிறது. இதல்லாமல் இக்கடமையை நிறைவேற்ற இயலாது. ஒவ்வொரு தலைமுறையும் அதற்கு முந்தைய தலைமுறையிலிருந்து தமக்குக் கிட்டிய ஞானத்தைத் தானே ஈட்டிய அறிவோடு இணைத்துத் தனக்குப்

பின் வரும் தலை முறைக்குக் கிட்ட வழி வகுக்கிறது, எனவே அறிவு தலைமுறைக்குத் தலைமுறை வளர்ந்து வருகிறது.

இன்றைய தலைமுறையினர் இவ்விதமான பரிமாற்றத்தின் மூலம் பரந்த அறிவைப் பெற்றுள்ளனர். இத்தகைய அறிவில் தருக்க முறை (Logic), தத்துவம் (Philosophy), சமயம் (Religion), நுண்பொருள் கோட்பாட்டியல் (Metaphysics) ஒழுக்கவியல் (Ethics), உளவியல் (Phychology) ஆகிய துறைகள் உட்படும் பல தவறான கருத்துகளில் சசூதுவாதில்லாமல் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ள மக்களின் மனதில் இந்த அறிவு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. நவீன அறிவியலில் நல்ல பாண்டித்தியம் மாத்திரமல்லாமல் அவற்றின் மூல ஆதாரங்களைப் பற்றியும், அடிப்படைக் கோட்பாடுகள் பற்றியும் அறிந்திருந்தால் மாத்திரமே தவறான கருத்துக்களை மக்களின் மனதிலிருந்தும் அகற்ற முடியும். இப்னுதைமிய்யா மற்றும் தஸஸானி போன்ற அறிஞர்கள் தங்கள் காலத்தில் நிலவிய தவறான கருத்துக்களை தங்கள் பெற்றிருந்த இத்தகைய அறிவின் மூலமே அகற்றினர். இன்றைய கால கட்டத்தில் மக்களிடையே பரவியுள்ள தவறான அறிவு உச்ச கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த சசூழ்நிலையில், திருக்குர்ஆன் ஆய்வும் அதற்கு விளக்கவுரை வழங்குவதும் மிகக் கடினமான ஒரு பணியே ஆகும். பொறுமையுடன் தளரா முயற்சி வேண்டும். பண்டைய இலக்கியத்திலும் நவீன அறிவியலிலும் போதிய அறிவும் தேவை. இந்தத் தகுதிகளோடு உறுதியோடு தன்னை முழுமையாக அர்ப்பணிக்கத் தயாராகும் ஒருவராலேயே இப்பணியில் ஈடுபட முடியும் திருக்குர்ஆனில் ஆழ்ந்த அறிவும் பண்புகளும் வாய்ந்த அறிஞர் நவீன அறிவியலில் ஆய்வு செய்து, திருக்குர் ஆனின் அடிப்படையில் பலனுள்ள அறிவைத் தேர்வு செய்ய வேண்டும். நவீன தொழில் நுட்ப அறிவையும் தர்க்க வாத முறையையும் மதிநுட்பத்துடன் கையாண்டு இன்றைய மக்களை அணுக வேண்டும். திருக்குர்ஆன் காட்டும் நேர்வழியை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இவ்விதம் இன்றைய மக்களுக்குத் திருக்குர் ஆனை விளக்கிப் போதிக்க வேண்டும். இதுதான் நபி(ஸல்) அவர்கள் கையாண்ட முறை.

ம்இத்தகைய அறிஞர்களை உருவாக்குவது எப்படி‘ என்ற கேள்வி எழலாம். இஸ்லாமிய உலகில், திருக்குர் ஆன் ஆய்வை மையமாகக் கொண்டு அறிவார்ந்த செயல்பாடுகளில் முழுக்கவனம் செலுத்தி இயங்கும் பல்கலைக்கழகங்கள் உருவாகும் வரை இது சாத்தியமல்ல என்பது உண்மையே. இப் பல்கலைக் கழகங்கள் யாவற்றிலும் தர்க்கவியல். மனோ தத்துவயியல் (Psychology), ஒழுக்கவியல் (Ethics), சமயவியல் (Religion) , கொள்கை ரீதியிலான அறிவியல் துறைகளும் (Theoretical Sciences), பொருளாதாரம் (Economics), அரசியல் (Politics) சட்டம் (Law) போன்ற சமூகவியல் துறைகளும் (Social Services) கணிதம் (Mathamatics), வேதியியல் (Chemistery), இயற்பியல் (Physics), மண்ணியல் (Geology), வானியல் (Astronomy) போன்ற இயற்பொருள் சார்ந்த அறிவியல் (Physical Sciences) துறைகளும், இணைந்து இயங்க வேண்டும். இத்தகையப் பல்கலைக் கழகங்களில் பயிலும் ஒவ்வொரு மாணவ மாணவியும் திருமறைக் கல்வியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு, இதர துறைகளில் தன் விருப்பத்திற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு ஒன்றோ இரண்டோ பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும், இவ்விதம் ஒருவர் தாம் கல்வி பயிலும் காலத்திலேயே தம் அன்றாட அலுவல்களில் ஒன்றாக குர்ஆனை ஆய்ந்து கற்கும் வாய்ப்பை அடைகிறார், இவ்வாறு தான் கற்ற மெய் ஞானத்தை மக்கள் அனைவரும் பலன் பெறும் வகையில் போதிப்பதும் அவருக்குச் சாத்தியமாகும்...

இது அவ்வளவு எளிதான பணியல்ல என்பது கண்கூடு. எனவேதான் இது ஒவ்வொருவர் மீதும் பொறுப்பாகச் சுமத்தப்படவில்லை. அறிவுத்தாகமும், தக்க முயற்சியும் கொண்டு தொடர்ந்து சிந்தித்து

உய்த்துணர்ந்து சிக்கல்களுக்குத் தீர்வு காணும் ஆற்றல் படைத்தவர்களுக்கே இது சாத்தியமாகும். பட்டினியால் வாடும் மனிதன் உணவையும் நீரையும் தேடி ஏங்குவது போல், இத்தகைய மனப்பான்மையுடையவர்கள் உண்மையை அறிய ஏக்கம் கொள்வர். என் இரட்சகனே! என் அறிவை அதிகப்படுத்துவாயாக என்று எப்போதும் இறைவனை இறைஞ்சியவர்களாகத் தொடர்ந்து செயல்படுவர்.

இத்தகையோர் முறையாக வழிகாட்டப்படுவார்களேயானால் செறிந்த அறிவும் ஞானமும் அடைவர். குர்ஆனின் கருப்பொருளைக் கிரகிப்பதும் விளக்கவுரை பகர்வதும்.

1. ஹு க்ம், இகாமத் ஆகிய இவ்விரு வார்த்தைகளும் திருக்குர்ஆனில் மிக ஆழ்ந்த கருத்துக்களாகத் தர பிரயோகிக்கப் பட்டுள்ளன. ஹு க்ம்' என்பது தனிமனிதன் ஒருவன் தன் வாழ்க்கையில் திருக்குர்ஆனின் போதனைகளைப் பின்பற்றுவதைக் குறிப்பதாகும். இகாமத்' என்பது திருக்குர்ஆனின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குகந்து சமுதாய (கூட்டு) வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாகும். எனவே இத்தலைப்புக்குரிய விளக்கம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய தனிச்சிறப்பான பண்பாகி விடும். எனினும் அறிவை நாடும் ஒவ்வொருவரும் இவ்வுன்னதப் பணியை அவரவர் திறமைக்கும், அர்ப்பணிக்கவியலும் நேரத்திற்கும் ஏற்ப மேற்கொள்ளலாம்.

திருமறையைக் கற்கும்படி மக்களுக்கு ஆர்வமூட்ட நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

குர்ஆனைத் தானும் கற்று (பிறர்க்கும்) கற்பிப்பவனே உங்களில் மிகச் சிறந்தவன்- (புகாரி).

இக்கருத்தை வலியுறுத்தும் வசனம் திருமறையிலும் உள்ளது.

மார்க்க விஷயங்களை அறிந்து கொள்ள அவர்களின் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் சிலர் மாத்திரம் புறப்பட்டால் ஆகாதா? (அல்குர்ஆன்9:122.)

இத்தகைய மார்க்க அறிவு, திருக்குர்ஆனை ஆழ்ந்த சிந்தனையுடன் ஆய்வதால் கிடைக்கப்பெறும் பேறு ஆகும். இம்மாதிரியான ஒரு விளக்கத்தைத்தான் தம் தோழர்கள் பெற வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் விரும்பினார்கள். நபித்தோழர்களில் குறிப்பிட்ட சிலருக்கு நுட்பமான மார்க்க அறிவு நல்கியருளுமாறு இறைவனை இறைஞ்சினார்கள். இத்தகைய ஆற்றலை இயல்பாகப் பெற்றிருந்தவர்களை நோக்கி, (இஸ்லாத்திற்கு முந்திய) அறியாமை காலத்தில் உங்களில் சிறந்தவர் யாரோ அவரே இஸ்லாத்திலும் சிறந்தவர் எனக் கூறினார்கள்.

திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்பத் தனிப்பட்ட வாழ்வும், கூட்டு வாழ்க்கையும்

இதுவரை நாம் திருக்குர்ஆன் மீது நமக்குரிய மூன்று பொறுப்புகளைப் பற்றி விவரித்தோம். இனி நான்காவது பொறுப்பைக் கவனிப்போம். குர்ஆனின் போதனைக்கு ஏற்ப செயல்படுவதே அது. திருமறையின் மீது ஈமான் கொண்டு அதைக் கற்று ஆய்ந்து அதன் கருப்பொருளைக் கிரகித்து, அதற்கேற்ப நம் அன்றாட வாழ்க்கையில் செயல்படவேண்டும், பொல்லாங்கு (தீமை)களை அகற்ற ஓதப்படும் தாரக மந்திரங்களும் மாயாஜால சகூத்திரங்களும் அடங்கிய நூலல்ல குர்ஆன்: இறைவனின் ஆசிகளைப் பெற்றுத் தரும் வெறும் ஒர் உபாயம் மாத்திரமுமல்ல. அதன் வசனங்கள். அல்லாஹ்விடமிருந்து நற்கூலியை (பேறுகைகள்) கேட்டுப் பெறுவதற்கும் மரணவேதனையிலிருந்து நிவாரணம் பெறுவதற்கும் மாத்திரம் ஓதப்படவேண்டியவை அல்ல. நம்முடைய ஆய்வுத்திறனுக்கும் கற்பனை ஆற்றலுக்கும் சிறந்த பயிற்சி அளிக்கும் விதத்தில் அதை ஆய்ந்து, புரியாத கருத்துக்களிலும், சிந்தனைகளிலும், நுட்பமான வேறுபட்ட விளக்கங்கள் காணுவதிலும் மூழ்குவதற்காக மட்டுமே பயன்படுத்தக் கூடியதுமல்ல. திருக்குர்ஆன் மனித இனத்திற்கு ஒரு நேர்வழி காட்டி என்பதை நாம் அறிவோம். எனவே வழிகாட்டி என்ற நிலையில் திருக்குர்ஆனின் போதனைகளை ஏற்று, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அவற்றை வழிகாட்டியாகக் கொண்டு அவற்றிற்குகந்து செயல்பட வேண்டும்.

அப்படியானால்தான் திருக்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கம் நிறைவேறும்,. திருக்குர்ஆனை ஓதினாலும், அதன் கருப்பொருளை ஆழ்ந்து சிந்தித்தாலும்., அதன் போதனைகளுக்கு ஏற்ப நம்முடைய வாழ்க்கை அமையவில்லையானால், இச் செயல்களினால் எவ்விதமான நற்பலனும் ஏற்பட்டு விடாது எனத் தெள்ளத் தெளிவாக நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் அச்சமூட்டும் செய்தி ஒன்றைக் கூறினார்கள். பின்னர் தீனை - இறைநெறியைப் பற்றிய அறிவு இல்லாமல் போகும் காலத்தில் தான் இவ்வாறு நிகழு என்றும் கூறினார்கள், ஸியாத் இப்னு லபீது(ரழி) வினவினார்கள்: அல்லாஹ்வின் தூதரே! நாங்களும் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருக்கிறோம், எங்கள் பிள்ளைகளுக்கும் ஓதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்: அவர்களும் தங்களுடைய குழந்தைகளுக்கு ஓதிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இவ்வாறிருக்க, இறைநெறி பற்றிய அறிவு எப்படி இல்லாமல் போகும்“

பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். நன்றாக இருக்கிறது உன் கூற்று ஸியாதே! நான் உம்மை மதீனா நகரிலேயே மிகவும் புத்திசாலி என்று நினைத்திருந்தேன். ‘தர்களும் கிறிஸ்தவர்களும் தவ்ராத்தையும் இன்ஜீலையும் எத்தனையோ முறை ஓதுகின்றார்கள் என்பதையும் பிறகு அதன் அறிவுரைகளின் படி சிறிதளவும் அவர்கள் செயல்படுவதில்லை என்பதையும் நீர் பார்க்கவில்லையா‘ (இப்னு மாஜ்ஜா)

இவை மாத்திரமல்லாமல், நாம் திருமறையின் கட்டளைகளை அலட்சியம் செய்வோமானால், திருக்குர்ஆனை ஓதுவதால் நன்மை விளைவதற்குப் பதிலாக நம்முடைய ஈமான் அரிக்கப்பட்டுவிடும், கீழ்வரும் இறைவசனம் இக்கருத்தை வெளியிடுகிறது. (அல்குர்ஆன்5:44)

எவர் அல்லாஹ் அருளியவற்றை (தம் வாழ்க்கையின்) நியதிகளாகக் கொள்ளவில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே! .

இக்கருத்தை வலியுறுத்தும் நபிமொழிகளும் உள்ளன: அவை:

1. ஒருவருடைய ஆசைகள் யாவுமே நான் கொண்டு வந்ததற் (திருமறைக்)கு கீழ்ப்படிந்தவையாக ஆகாத வரை அவர் ஈமான் கொண்டவராக மாட்டார்.

2. அனுமதிக்கப்படாதவை என திருமறை விதித்தவைகளை அனுமதிக்கப்பட்டவைகளாகக் கருதுபவர்கள் திருமறையில் ஈமான் (அதைத் தெய்வ வெளிப்பாடாக ஏற்றுக்) கொண்டவர்களல்லர்.

திருக்குர் ஆனைக் கவனமாக வாசித்த பின்னரும் அது முழுமையான உண்மையா (இறைமறை தானா) என்று முடிவு செய்ய முடியாமல், இன்னும் உண்மையைத் தேடித் தன் கவனத்தைப் பல திசைகளிலும் திருப்பி அலைந்து கொண்டிருப்பவரின் நிலைவேறு. ஆனால் திருக்குர்ஆனை இறைவேதம் என்று உறுதியாக நம்புகின்ற ஒருவர், எவ்வளவு கடினமான இன்னல்களுக்கு ஆளானாலும், மிகப் பெரும் தியாகங்களைச் செய்ய நேரிட்டாலும் சரியே, திருக்குர்ஆனின் ஆணைகளுக்கு முற்றிலும் அடிபணிந்து, தன் இயல்புகளையும் பண்புகளையும் சீர் செய்து., திருக்குர் ஆனின் போதனைக் கேற்ப வாழும் திடச் சித்தத்துடன் அதனை ஊன்றிக் கற்றால் அல்லாமல் அதன் மூலம் எவ்விதப் பலனையும் பெற முடியாது. திலாவத்ம் எனும் பதத்தின் மொழி ரீதியிலான பொருள் பற்றி விவரிக்கும் போது கூறியதுபோல், தன்னை முழுமையாக அர்ப்பணித்து, விடா முயற்சியுடன் நீண்ட காலம் தொடர்ந்து திருக்குர்ஆனை ஊன்றிக் கற்பவர் மாத்திரமே அதன் அறிவுரை மூலம் முழுப் பலனையும் பெற முடியும். பண்பட்ட உறுதியான சுயகட்டுப்பாட்டுடன் ஒருமுகப்பட்டுத் தன்னை இந்தப் பணியில் அர்ப்பணிப்பதன் மூலம் மேலே கூறப்பட்ட நபிமொழிகளில் குறிப்பிட்டுள்ளபடி, தான் என்ற செருக்கு ஒழிந்து, குர்ஆனுக்கு முற்றிலும் அடிபணியும் பண்பு உருவாகும்.

எவர்கள் நேர்வழியில் செல்கிறார்களோ அவர்களுடைய நேர்வழியின் ஒளியை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தக்வாவை அருளுகின்றான் (அல்குர்ஆன் 47:17)

திருமறையின் நெறிமுறைக்கு ஏற்ப வாழத் தலைப்படுவன் அந்த மார்க்கத்தில் நிலை பெற்று படிப்படியாக முன்னேறி இறையருள் மிக்கதொரு உன்னத நிலையை எய்துவான். மாறாக திருக்குர்ஆனின் அறிவுரைக்கேற்பத் தன் வாழ்க்கை முறையை மாற்றியமைக்க முற்படாதவன் திருக்குர்ஆனை ஓதுவதில் செலவிடும் நேரம் வீண் விரயமாகி விடும். இமாம் கஸ்ஸாலி அவர்கள் ஞானி ஒருவர் சொன்னதாக அறிவிக்கின்றார்கள்: திருக்குர்ஆனை வாசிப்பவர்கள் சிலர் அதன்மூலம் நற்பலனைப் பெறுவதற்குப் பதிலாக திருக்குர் ஆன் அவர்கள் மீது இடும் சாபத்திற்கே உள்ளாகி விடுகிறார்கள். லஃனத்துல்லாஹி அலல் காஃதிபின்“ (பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக என்று ஓதும்போது ஓதுபவர் பொய்யராக இருந்தால் இச்சாபத்திற்கு அவரே இலக்காகி விடுகின்றார்.“ (அல்குர்ஆன் 2:279)

இது போலவே ஒருவர் இவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளாவிட்டால், அல்லாஹ்வுடனும் அவனுடைய ரசூலுடனும் யுத்தம் செய்ய சித்தமாகி விடுங்கள் என்ற வசனத்தை ஓதும்போது, அவரே அல்லாஹ்வின் கட்டளைகளைப் புறக்கணிப்பவராக இருந்தால், இந்த எச்சரிக்கை அவரை நோக்கியே விடுக்கப்பட்டதாகி விடும். இவ்விதம் எடையில், அளவில் மோசடி செய்பவர்கள், புறம் பேசுபவர்கள், குறைகூறுபவர்கள் எல்லாம் குறைசொல்லிப் புறம்பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான்“ - (104:1) எனும் திருவசனத்தை ஓதும்போது இந்தப் பயங்கரமான எச்சரிக்கைகள் எல்லாம் அவர்களுக்காகவே இறங்கியதாகத் தோன்றும். இவ்வடிப்படையில் சிந்திப்போமாயின், ஒருவனுடைய செயல்கள் திருக்குர்ஆன் தரும் அறிவுரைக்கு ஏற்ப அமையவில்லையானால் அவர் திருக்குர்ஆனை ஓதுவதால் என்ன பலனைப் பெறுவார் என்பது இலகுவாக விளங்கும்.

திருக்குர்ஆனை ஆராய்ச்சி செய்து புலனாய்வு மேற்கொண்டு அதன் கருப்பொருட்களைக் கிரகித்து, அவற்றை விவரித்து எழுதி நூற்கள் தொகுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மாத்திரம் குர்ஆனைக் கற்று, கற்றபின் அதற்குத் தக நிற்காதவர்கள் இன்னும் இழிவான பாவிகள். இத்தகையவர்களின் ஆய்வும் அறிவும் ஒரு பகட்டான அறிவாற்றல் பயிற்சி மாத்திரமே என்ற நிலைக்குத் தள்ளப்படுவதோடல்லாமல் திருமறையைக் கேளிக்கைப் பொருளாக்கி நையாண்டி செய்ததாகவுமே கருதப்படும். இதன் விளைவாக திருக்குர்ஆன் இவர்களை நேர்மைப்படுத்துவதற்குப் பதிலாக வழி தவறச் செய்து விடும்.

இதைக் (குர்ஆனை)கொண்டு அவன் (அல்லாஹ்) அநேகரை வழிகெடவும் செய்கிறான்: இதைக் கொண்டு அநேகரை நேர்வழி அடையும்படியும் செய்கிறான் (அல்குர்ஆன்2:26)

திருக்குர்ஆனை நன்கு கற்றறிந்தவர்கள் என்றழைக்கப்படுகின்ற பலர் பலவிதமான தவறான விளக்கங்களைக் கூறி, அதன்மூலம் மக்கள் பல வகையாக வழிகெடவும், வழி தவறவும் காரணமாகி விடுகின்றனர். குர்ஆனைப் பற்றிய அவர்களின் சிந்தனையாவும் புரியாத மறைபொருளைக் காண வேண்டும் என்ற கேடு விளைவிக்கும் ஆர்வத்தால். உந்தப்படுவதுதான் இதற்குக் காரணம் ஆகும். திருக்குர்ஆன் இத்தகையவர்களைப் பற்றி வெகு பொருத்தமாக இவ்வாறு கூறுகிறது:

குழப்பம் செய்யும் நோக்கத்துடன் ஐயப்பாடுகளுக்கு இடமளிக்கும் வசனங்களின் மறைபொருளைத் தேடித் திரிந்து கொண்டும் அவற்றின் கருத்தைத் திரித்துக் கூற முயற்சி செய்து கொண்டும் இருப்பார்கள் (அல்குர்ஆன்3:26)

நபித்தோழர் திருக்குர்ஆனின் அறிவுரைகளைத் தம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற மகத்தான முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். இதன் காரணமாகவே, திருமறையை ஆய்ந்தறிய வேண்டுமென்று அவர்களில் தனி ஆர்வம் கொண்டவர்கள் ஒவ்வொரு அத்தியாயத்தையும்

(சூராவையும்) முழுமையாகக் கிரகித்து அறிய ஆண்டாண்டுகளாக முயன்றார்கள். திருக்குர்ஆனின் கருத்துக்களைக் கிரகித்துத் தாங்கள் அவற்றைத் தம் வாழ்க்கையில் நிலையாகக் கடைப்பிடிக்கும் வரை எத்தனை காலமானாலும் அடுத்த ஆய்வில் இறங்க முற்படாமல் இருந்தனர். தங்களின் ஆராய்ச்சியின் விளைவாக ஈட்டிய அறிவு கண்ணியப்படுத்தப்பட்டு நிலைபெற வேண்டுமென்ற ஆர்வத்தை விட திருமறையின் அறிவுரைக் கேற்ப வாழும் மனப்பான்மையையும் ஆற்றலையும் பெற வேண்டுமென்ற உணர்வே மிகைத்திருந்தது. ஏற்கனவே கற்றவற்றை நடைமுறைப்படுத்தி விட்டோம் என்ற மனத்திருப்தி ஏற்படும் வரை திருக்குர்ஆன் ஆய்வை அவர்கள் மேற்கொண்டு தொடர்வதில்லை

ஒர் அத்தியாயத்தை மனனம் செய்வதால் அதை நினைவில் இருத்திக் கொள்வது மாத்திரமே குறிக்கோள் எனக் கொள்ளாமல் அவ்வத்தியாயத்தின் கருப்பொருளைக் கிரகித்து அது காட்டும் ஒளிமிக்க நெறிகளின் படி தங்களுடைய பண்புகளும் இயல்புகளும் அமைய வேண்டுமென்பதிலேயே அதிகக் கவனமும் அக்கறையும் செலுத்தினார்கள். ஹிஃப்ளுள் குர்ஆன்' திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்வது என்பதன் மூலம் நபித்தோழர் பெருமக்கள் யதார்த்தத்தில் கருதியது, என்னவெனில் அதன் வார்த்தைகள் நினவிலிருத்தப்பட்டுப் போற்றப்பட வேண்டும் மனனம் செய்தவரின் ஆளுமை (Personality) திருக்குர்ஆனின் மெய்க்கருத்துக்களால் ஊடுருவப்பட்டு, அவருடைய செயல்பாடுகளில் அதன் போதனை பிரதிபலிக்க வேண்டும்: அவருடைய உள்ளத்தில் அதன் ஒளி பரவ வேண்டும் என்பது திண்ணம். வாழ்க்கை முறைக்கும் திருக்குர் ஆனுக்கும் இடையே உள்ள பந்தப் பிணைப்பு முழுமையாகவும் துல்லியமாகவும் துலங்கும் வகையில் அமைந்திருந்த நபித்தோழர்களின் செயல்கள் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையை ஒத்திருந்தன. நபி(ஸல்) அவர்களோடு மிக நெருங்கி ஒன்றி வாழ்ந்த அன்னாரின் துணைவியார் ஆயிஷா(ரழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையை மிக நுணுக்கமாக அறிந்திருந்தவர்கள் என்ற நிலையில் முஸ்லிம் சமுதாயத்திற்கு (உம்மத்தினருக்கு) ஒரு சிறந்த போதகராகவே விளங்கினார்கள். அவர்களிடம் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையைப் பற்றி வினவப்பட்ட போது அவர்களுடைய வாழ்க்கை முறை குர்ஆனின் செயலுருவாக அமைந்திருந்தது" என்று பதிலுரைத்தார்கள். உண்மையும் விவேகமும் நிறைந்த இந்த மறுமொழி உண்மையான முஸ்லிம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் திருக்குர்ஆனின் தாக்கம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது

திருக்குர்ஆனைக் கற்று உரிய நன்மைகளையும் பலன்களையும் பெற சிறந்த வழி திருக்குர்ஆனின் கருப்பொருளைப் பற்றிய அறிவு அதிகரிக்க அதிகரிக்க அதன் போதனைகளின் வெளிச்சத்தில் நம் செயல்முறைகளைச் சீர்படுத்தி, ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தி, நம்முடைய வாழ்க்கையில் திருக்குர்ஆனை ஊடுருவச் செய்வதேயாகும். இல்லையெனில் பெருங்கேடு விளைய நேரிடலாம். திருக்குர்ஆன் மறுமையில் ஆகிறத்தில் உங்களுக்குச் சாதகமாக அல்லது பாதகமாக வாதிடும்." எனும் நபி மொழியின் கருத்துக்கேற்ப குர்ஆனைப் பற்றி நாம் பெற்ற அறிவும் விளக்கமும் நம்முடைய அலட்சியம் மற்றும் புறக்கணிப்பின் காரணமாக நமக்கு எதிராக, நாம் மறுக்கவியலாத வாதமாக மாறி நமக்கு அழிவைத்தரும். அத்துடனின்றி அல்லாஹ்விடமிருந்து நமக்குப் பயங்கரமான தண்டனையைப் பெற்றுத் தருவதற்குக் காரணமாகவும் ஆகி விடும்.

குர்ஆனின் கட்டளைப்படி செயலாற்றல்- அமல் பில் குர்ஆன்' என்பது இரு அம்சங்களைக் கொண்டது. ஒன்று: தனிமனிதனுக்குரியது: இரண்டு: சமுதாய ரீதியாக நிறைவேற்றப்பட வேண்டியவை. தனி மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்குரிய கட்டளைகள் உடனடியாகக் கடைப்பிடிக்க வேண்டியவை. அவற்றைப் பற்றி ஒருவன் அறிந்த மாத்திரத்தில் அவற்றை கடைப்பிடிப்பது அவனுக்குக் கடமையாகி விடுகின்றது. அவற்றைத் தன் நடைமுறையில் ஏற்று நடப்பதற்குத் தயங்குவதற்கோ தள்ளிப் போடுவதற்கோ எவ்வித நியாயமும் இல்லை. செயலாக்கத்தில் காட்டப்படும் அலட்சியத்திற்குத்

தண்டனையாக அவனுக்கு இறையருள் மறுக்கப்பட்டு நாளடைவில் குர்ஆனின் கோட்பாடுகளுக்கொப்ப வாழாத பாவியாக மாறிவிடுகிறான். சொல்லுக்கும் செயலுக்கும், ஈமானுக்கும் நடைமுறைக்கும் இடையே காணப்படும் இந்த அகண்ட வேறுபாடு அல்லாஹ்வின் விசுவாசிகளே! நீங்கள் செய்யாத காரியங்களை (பிறர் செய்யும்படி) ஏன் கூறுகின்றீர்கள்? நீங்கள் செய்யாததைக் கூறுவது அல்லாஹ்விடத்தில் மிக்க வெறுக்கத் தக்கதாக இருக்கிறது" அல்குர்ஆன்(61:2,3) வெறுப்பைத் தேடித் தந்து நயவஞ்சகத்தை உருவாக்கிவிடும். இவ்வுண்மை பொதிந்துள்ள நபி மொழிகளும் உள்ளன:

என்னுடைய உம்மத்தினரிடையே காணப்படும் நயவஞ்சகர் (முனாபிக்கு)களில் பெரும்பாலோர் குர்ஆனை ஓதுபவர்களாகவே இருப்பர்.

எனவே திருக்குர்ஆனைக் கற்று அதன் மூலம் பெற்ற அறிவுரைகளை காலந்தாழ்த்தாது உடனடியாகச் செயல்படுத்துவதே முஸ்லிம் ஒருவனுக்கு மிகவும் பாதுகாப்பான வழியாகும்.

சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் கட்டளைகளைப் பொறுத்தவரையில், தனிமனிதன் ஒருவன் அவற்றை உடனடியாகச் செயல்படுத்துவதில், அத்துணை பொறுப்பாளி அல்ல. ஏனெனில் அவனுடைய கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே அவை கட்டுப்பட்டவை அல்ல. எனினும் தன்னைச் சுற்றிலும் நிலவும் சுற்றுச் சசூழலை தன்னாலியன்ற வரை சீர்திருத்தி திருக்குர்ஆனின் நெறிமுறைகளுக் கொப்ப முழுமையாகச் செயல்படும் ஒரு சமுதாயத்தை உருவாக்க முயல்வது அவன் மீது கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற அவன் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும் அல்லாஹ்விடத்தில் அவன் சமர்ப்பிக்கும் நல்ல ஆதாரங்களாகக் கருதப்படும், அவன் தன் கடமையைச் செய்துவிட்டான், எனவே அவன் மீது குற்றமில்லை என்பதே காரணம். இதை உண்மைப்படுத்தும் திருமறை வசனங்கள் உள்ளன.

அவர்களில் ஒரு கூட்டத்தினர் (இவர்களை நோக்கி) அல்லாஹ் எவர்களை அழித்திட வேண்டுமென்று அல்லது கடினமான வேதனைக்குள்ளாக்க வேண்டுமென்று (நாடி) இருக்கின்றானோ அந்த மக்களுக்கு நீங்கள் ஏன் நல்லுபதேசம் செய்கிறீர்கள்?" என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் இதனால் நாங்கள் உங்கள் இறைவனிடம் எங்கள் பொறுப்பிலிருந்து நீங்கி விடுவதற்காக (நாங்கள் நல்லுபதேசம் செய்கிறோம்) என்றும் (அதனால்) அவர்கள் அஞ்சி நேர்வழிப்படலாம் என்றும் கூறினார்கள். (அல்குர்ஆன் 7:164)

இந்த இறைவசனம் ஒருவன் ஒரு சமுதாயத்தை நல்வழிப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள். அச்சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படா விட்டாலும் அவனுடைய கடமையை நிறைவேற்றிவிட்டதாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதைக் காட்டுகின்றது. அதனால் சமுதாயம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட ஒருவன் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் தன் கடமையை மட்டும் நிறைவேற்றிய திருப்தியுடன் வாளாவிருந்து விடுவானாயின், தனிப்பட்ட முறையில் அவன் செயல்படுத்தியவையாவும் கீழே வரும் இறைவசனத்தின்படி இறைவனால் நிந்திக்கப்பட்டகண்டனத்திற்குரிய செய்கைகளைப் போல் ஆகி விடும்.

நீங்கள் வேதத்தில் (உள்ள) சில கட்டளைகளை (மட்டும்) விசுவாசித்துக் கொண்டு சில கட்டளைகளை நிராகரிக்கின்றீர்களா?" (அல்குர்ஆன் 2:85)

திருக்குர்ஆனை விளங்கிக் கொள்வதை ததக்குர் என்று பொதுவாகக் குறிப்பிடுவது போல் அதன் அறிவுரைகளை ஏற்று நடப்பதற்கு ஹுகும் பிமா அன்ஸலல்லாஹ்' - அல்லாஹ் இறக்கியருளியதன் அடிப்படையில் தீர்வு காண்பது" என்ற சொற்றொடர் பரவலாகக் கையாளப்படுகிறது. இந்த வசனத்தின் கருவாகிய ஹுகும் எனும் சொல்லின் சரியான பொருளை உணர்ந்து கொள்ள கீழே வரும் இறைவசனங்களில் அதன் பிரயோகத்தைக் கவனிக்க வேண்டும்.

அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி வேறெவர்க்கும் அதிகாரம் இல்லை.“ இங்கே ஹு கும்‘ எனும் சொல் அதிகாரம்‘ (அல்லது ஆணை) எனும் பொருளைத் தரும் வகையில் கையாளப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 13:37)

இவ்வாறே அரபி மொழி)யில் சட்ட திட்டங்களைக் கொண்டதாக இதை நாம் இறக்கியுள்ளோம்.“

இங்கே திருக்குர்ஆன் ஹு கும்‘ எனக் குறிப்பிடப்பட்டு நீதி வழங்கும் நியதிகள்‘ எனும் பொருளில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 4:105)

(நபியே!) முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாமே உம்மீது அருளியிருக்கின்றோம். ஆகவே அல்லாஹ் உமக்கு அறிவித்தவற்றைக் கொண்டு மனிதர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பீராக!“

இங்கே ஹு கும்‘ எனும் சொல்லிலிருந்து பிறந்த (உங்ழ்ண்ஸ்ஹறண்ஸ்ங்) (அரபி) (தஹ்கும) எனும் பதம், நபி (ஸல்) அவர்களின் தூதுவப்பணியைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

எவர்கள் அல்லாஹ் இறக்கியருளியவை (கட்டளை)களின் படி தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே“ (அல்குர்ஆன்) 5:44)

எவர்கள் அல்லாஹ் அருளிய (வேதக்கட்டளைப்) பிரகாரம் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் நிச்சயமாக அக்கிரமக்காரர்கள் தாம்.“ (அல்குர்ஆன் 5:47)

எவர்கள் அல்லாஹ் அருளிய கட்டளைகளின் (வேதப்) பிரகாரம் அவர்கள் நிச்சயமாக பாவிகள் தாம்.“ (அல்குர்ஆன் 5:45)

மேற்கண்ட வசனங்கள் திருக்குர்ஆன் குறிப்பிடும் நியதிகளின் அடிப்படையில் நீதி வழங்காதவர்கள், நிராகரிப்பவர்களே, அக்கிரமக்காரர்களே, பாவிகளே என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றன.

அவர்களை நீ வேதனை செய்தால் (அதற்கான உரிமை உனக்கு உண்டு, ஏனெனில்) அவர்கள் உன்னுடைய அடிமைகள், அன்றி நீ அவர்களை மன்னித்து விட்டாலோ (அதுவும் உன் உரிமையே), நீதான் மிகைத்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கின்றாய்.“ (அல்குர்ஆன் 5:118)

கீழ் வரும் நபிமொழி நம்முடைய இன்றைய நிலைக்கு எவ்வளவு ஒத்திருக்கின்றது என்பதைக் கவனியுங்கள்.

ம்நிச்சயமாக அல்லாஹ் இந்த (வேத) நூலைக் கொண்டு சிலரை மேம்படுத்துகிறான், இன்னும் சிலரை இழிவு படுத்துகிறான்.‘

நபித்தோழர்கள் திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப வாழ்ந்தமையால், அதிகாரமும் புகழும் அடைந்தனர். நாமோ அவற்றைப் புறக்கணித்ததன் காரணமாக இழிவின் பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றோம்.

ஹு கும்‘ என்னும் அரபுச் சொல்லுக்கு நிகராக தமிழில் நீதி‘ தீர்வு‘ என்னும் சொற்களைப் பிரயோகிக்கலாம். ஆனால் இந்தச் சொல்லின் முழுக்கருத்தையும் விளங்கிக் கொள்ள மனித நடத்தையின் பின்னணியில் இரு அடிப்படை அம்சங்களாக விளங்கும் எண்ணம்‘(THOUGHT) மற்றும் செயல் (ACTION) இவற்றைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். ஒரு கருத்து அல்லது எண்ணம் ஒருவனுடைய உள்ளத்தை முழுமையாக ஆட்கொண்டிருக்கும் நிலையில் அவனுடைய செயல் தானாகவே அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் வெளிப்படும். எனவே ஓரு கட்டளையின்படிச் செயல்பட வேண்டும் என்ற கருத்தை வெளியிட - திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப செயல்படுவது

(அல்லாஹ் அருளியதைக் கொண்டு தீர்வு காண்பது) என்ற உயர்ந்த பொருளடங்கிய ஒரு சொற்றொடரைக் கையாண்டிருப்பதற்குத் தக்க காரணம் இல்லாமலில்லை. திருக்குர்ஆன் நல்கும் உண்மை அறிவு ஒருவனுடைய மனத்திலும் இதயத்திலும் ஆழப்பதிந்து அவனுடைய எண்ணங்கள் யாவும் திருமறை தரும் உண்மையால் உந்தப்பட்டால் தான் அவனுடைய செயல்கள் நடைமுறையில் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப விளங்கும் என்பதை வலியுறுத்துவதுதான் அதன் நோக்கம்.

திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப செயல்படுவதைக் குறிப்பிடக் கையாளப்பட்ட இன்னொரு சொல் இகாமத்‘ (நிலைநாட்டுவது) என்பதாகும். கிறித்தவர்களையும் ௶தர்களையும் பற்றிக் குறிப்பிடும் 5:66 வசனத்தில் இச்சொல் வருகிறது

தவ்றாத்தையும் இன்ஜீலையும் அவர்களுடைய இறைவனிடமிருந்து அவர்களுக்கு அருளப்பட்டவற்றையும் அவர்கள் கைக்கொண்டொழு கியிருந்தால் அவர்களுக்கு மேலிருந்தும் அவர்களுடைய பாதங்களின் கீழ் (பூமியில்) இருந்தும் புசித்திருப்பார்கள்

மீண்டும் அதே சூரா 68வது வசனத்திலும் இகாமத்‘ என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

(நபியே! அவர்களை நோக்கி) வேதம் அருளப்பட்டவர்களே! தவ்றாத்தையும் இன்ஜீலையும் உங்கள் இறைவனிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நீங்கள் கடைப்பிடித்து ஒழுகாத வரை நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களல்லர்

தனிப்பட்ட மனிதர் ஒருவருடைய ஒழுக்கம், திருக்குர்ஆனின் போதனைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த ஹு க்ம் பிமா அன்ஸல்லாஹ்‘ என்னும் சொற்றொடர் கையாளப் பட்டுள்ளது. ஆனால் சமுதாயம் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதைப் பற்றிக் குறிப்பிடும் போது இக்காமத்து மா அன்ஸலல்லாஹ்‘ என்னும் சொற்றொடர் கையாளப்பட்டுள்ளது. சமுதாயத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முழுமையான சமநிலையையும் ஒற்றுமையையும் நிலைநிறுத்தும் நிறைவான நியதிகளின் அடிப்படையில் ஒரு சமுதாய அமைப்பை நிறுவ வேண்டும். இத்தகைய ஒரு சமுதாயத்தின் அத்தியாவசியத்தை உணர்ந்து நம்பிக்கையுடன் மக்கள் அச்சமுதாயத்தை உருவாக்க முற்படும்போது, அடக்குமுறை, அத்துமீறல், கொடுமை, அநீதி ஆகியவையாவும் மறைவதோடு, அரசியல் ஒடுக்குமுறை பொருளாதாரச் சுரண்டல் ஆகியவையும் ஒழிந்து போய்விடும்

இதன் காரணமாகவே மேலே குறிப்பிட்ட வசனத்தில், குறிப்பாக பொது சமுதாய நலனும் பொருளாதார வளமும் இத்தகைய சமுதாய அமைப்பில் நிச்சயமாக்கப்பட்ட அம்சங்கள் என்று கூறப்பட்டுள்ளது. முழுமையான நீதியும் சமத்துவமும் நிலவும் ஒரு சமுதாய அமைப்பை நிறுவுவதற்காகவே அல்லாஹ் அவனுடைய நபிமார்களையும் வேதங்களையும் இறக்கியருளினான்.

நிச்சயமாக நாம் நம்முடைய தூதர்களைத் தெளிவான சான்றுகளுடன் அனுப்பி வைத்தோம். அவர்களுடன் வேதத்தையும் துலாக்கோலையும் மனிதர்கள் நீதமாக நடந்து வரும்பொருட்டு அருளினோம். (அல்குர்ஆன் 57:25)

அஸ்ஸு ரா‘ சசூராவின் இரண்டாவது பகுதியில் இந்தப் பொருள்பற்றி விரிவான விவரம் காணப்படுகிறது. இதில் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கிடையே நிலவும் ஒத்த கருத்து குறித்து கருத்தாழமும் விவேகமும் தொனிக்கும் வகையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவையாவன:

1) ஹு க்மே இலாஹி அல்லாஹ்வின் ஆணைகள் அல்லது தீர்வுகள்

2) இகாமத்தே தீன் தீனை (மார்க்கத்தை) நிலை நிறுத்தல்

3) ஈமான் பில் கிதாப் திருக்குர் ஆன் மீது ஈமான் கொள்ளுதல்

4) கியாமே நிஸாமே அத்ல் ஏ இஜ்திமாயியா நீதியும் சமத்துவமும்

நிறைந்த ஒரு சமுதாய அமைப்பை உருவாக்குவது.

ஆரம்பமாக, அல்லாஹ்வின் ஆணை அல்லது தீர்வே தலையானது என்னும் அடிப்படைக் கொள்கையை எடுத்துரைத்து (அஸ்ஷூ ரா சகூராவின்) பத்தாவது வசனத்தில், எல்லா சந்தர்ப்பங்களிலும் விளைவுகளைப்பற்றிக் கவலை கொள்ளாது இறைவனின் ஆணையை உணர்ந்து அதனை ஏற்றுச் செயலாற்றும்படி கற்பிக்கப்பட்டுள்ளோம்.

நீங்கள் எந்த விஷயத்தில் வேறுபடுகின்றீர்களோ அதன் தீர்ப்பு அல்லாஹ்விடம் இருக்கிறது.“ (அல்குர்ஆன் 42:10)

பதின்மூன்றாவது வசனம், இறைவனின் ஆணை அல்லது தீர்வு, தீன் (மார்க்கம்) மற்றும் ஷரியத் (இஸ்லாமிய நீதி நியதிகள்) ஆகிய வடிவில் தரப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறது.

நூஹ்வுக்கு எதனை அவன் (அல்லாஹ்) உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான். ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும், இப்றாகிம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் என்னவென்றால் மார்க்கத்தை நிலையாகக் கொள்ளுங்கள். அதில் பிரிவினை செய்து கொள்ளாதீர்கள்.“ (அல்குர்ஆன் 42:13)

பிறிதொரு வசனத்தில் நபி(ஸல்) அவர்கள், திருக்குர்ஆனில் அவர்களுக்குள்ள நம்பிக்கையைப் பிரகடனப்படுத்தி மக்களிடம் நீதி நேர்மையுடன் நடந்து காட்டி நீதமான ஒரு சமுதாயத்தை உருவாக்க உழைக்கும்படி உபதேசிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே (நபியே!) அ(ந்)த (உண்மையான மார்க்கத்தி)ன் பால் (மக்களை) நீர் அழையும், உமக்கு ஏவப்பட்ட பிரகாரம் நீர் உறுதியாக இரும், அவர்களுடைய விருப்பங்களை நீர் பின்பற்றாதீர். மேலும் நீர் கூறும். (அல்குர்ஆன் 42:15)

ம்அல்லாஹ் வேதமென்று எதனை இறக்கி வைத்தானோ அதனையே நான் ஈமான் கொண்டுள்ளேன். உங்களிடையே நீதமாகத் தீர்ப்பளிக்கவும் நான் ஏவப்பட்டுள்ளேன்.“ (அல்குர்ஆன்42:17)

மேலே கூறப்பட்ட விவரங்கள் எல்லாம் 17வது வசனத்தில் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

முற்றிலும் உண்மையும் நீதமுமான இவ்வேதத்தை அல்லாஹ்தான் இறக்கி வைத்தான். (நபியே!) விசாரணைக் காலம் நெருங்கி விட்டதென்பதை நீர் அறிவீரா (அல்குர்ஆன் 42:17)

மேலே குறிப்பிட்ட வசனத்தில் மீஸான்‘ (துலாக் கோல்) என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. பொருட்செறிவு நிறைந்த இச்சொல் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் கையாளப்பட்டுள்ளது. ஷபீர் அஹ்மது உதுமானி என்ற மார்க்க அறிஞர் இந்த வார்த்தைக்கு விரிவான கருத்துரை வழங்கியுள்ளார். திடப்பொருட்கள் நிறுக்கப்படுவதற்காகத் துலாக் கோலை உருவாக்க அல்லாஹ் மனிதனுக்கு வழிகாட்டியுள்ளான். இதுபோலவே, பொதுஅறிவு‘ என அழைக்கப்படும் யுக்தி‘ என்கின்ற துலாக்கோலையும், நீதி நியாய உணர்வு என அழைக்கப்படும் ஒழுக்க நெறி என்கின்ற துலாக்கோலையும், அல்லாஹ் வழங்கியுள்ளான். இவ்விதம் அல்லாஹ்வினால் அருளப்பட்டவைகளில் மிக உன்னதமான துலாக்கோல் உண்மை. மார்க்கமேயாகும். அடிப்படைப் பிரச்சினையாகக் கருதப்படுகின்ற ஹு க்கூக்குல்லாஹ் - படைத்தவனுக்கு (அல்லாஹ்விற்கு) உரிய உரிமைகள்: ஹு க்கூக்குல் இபாத் - படைப்பினங் களுக்குரிய உரிமைகள் ஆகியவற்றை முறையே வரையறுத்துக் காட்டி எல்லாப் பிரச்சினைகளுக்கும் நீதமான தீர்வு காண உதவுவது இந்த மார்க்கம் தான்.

மக்கள் உண்மை மார்க்கத்திலிருந்து விலகியதற்கும், இவ்வுலகில் பரவியுள்ள குழப்பங்கள், கொடுமைகள் யாவற்றிற்கும் மூல காரணம், மற்றவர்களை ஒடுக்கி அவர்களை ஆதிக்கம் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை தான். அஸ்ஷூ ரா சூராவின் 14வது வசனத்தில், மக்கள் உண்மை மார்க்கத்திலிருந்து விலகி வாழ்வதற்கும் வகுப்புவாதப் பிரிவினைகள் உருவாவதற்கும் காரணங்களைக் கூறி முஸ்லிம்கள் பிரிவினை மனப்பான்மையை விட்டொழிக்கும்படி வலியுறுத்தப்படுகின்றார்கள்.

அவர்கள் தங்களிடம் வேதம் வந்ததன் பின்னரும் தங்களுக்கிடையிலுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து விடவில்லை

திருமறையின் போதனைக்கு ஏற்ப நம்முடைய எண்ணங்களையும் செயல்களையும் அமைத்துக் கொள்வதால் விளையும் இறுதிப் பலன்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டத்தை நாம் எய்தி இருக்கின்றோம். மேலே விவரித்தபடி அல்லாஹ்வின் ஆட்சியும் (அதிகாரமும்) நீதியின் ஆதிக்கமும் வையகத்தில நிலை நாட்டபடுவதுதான் இப்பலன்கள் ஆகும்.

இத்தகைய சமுதாய அமைப்பு நிர்மாணிக்கப்பட்டதும் எல்லாவித அநியாயமும் அட்ஃழியமும் உலகிலிருந்து அழிந்து விடும். புரோகிதர்களும் பாதிரிகளும் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொண்ட தெய்வீகத்ததன்மையை நிலைநாட்ட முடியாமல் திணறுவார்கள். பணம் படைத்தவர்கள் செல்வத்தை அவர்களுக்கிடையிலேயே சுற்றிச் சுழன்று வரும்படி கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். எத்தகைய நிர்ப்பந்தமும் சுரண்டலும் சாத்தியமற்றதாகி ஒழிந்து போகும். மக்கள் அனைவரும் அல்லாஹ்வின் உண்மை அடியார்களாகி ஒருவருக்கொருவர் சகோதர வாஞ்சையுடன் வாழத் தலைப்பட்டு விடுவார்கள், ஆட்சியாளர்கள் நலிவுற்றவர்களின் உரிமைகளைக் காப்பதைத் தங்களின் தலையாயக் கடமையாகக் கொண்டு, அதிகாரிகளால் அவர்களுக்கு எவ்வகையிலும் கொடுமைகள் இழைக்கப்படா வண்ணம் கண்காணிக்க முனைவார்கள்.

திருக்குர்ஆன் கூறும் நியதிகளுக்கேற்ப நீதியும் சமத்துவமும் மிக்க இத்தகைய ஒரு சமுதாயத்தை நிலை நாட்டுவது அத்திருமறையில் நம்பிக்கை (ஈமான்) கொண்டுள்ள ஒவ்வொரு முஸ்லிம் மீதும் சுமத்தப்படும் கட்டாயக் கடமை ஆகும். முஸ்லிம்கள் ஒன்றிணைந்து சமுதாய ரீதியாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் ஆகும். இதற்காக அவர்கள் அல்லாஹ்விடம் பதில் சொல்லியும் ஆக வேண்டும், எனவே இப்பொறுப்பைத் தெளிவாக உணர்ந்து, அதைத் திடச் சித்தத்துடன் நிறைவேற்ற முன்வர வேண்டும், அஸ்ஷூ ரா சூராவின் இறுதிப்பகுதியைப் பற்றி நாம் மேலே சுருக்கமாக எடுத்துரைக்கும்போது குறிப்பிட்ட காலம் நெருங்கி விட்டது என்பதை நீர் அறிவீரா?" என்ற வசனத்தின் மூலம் இறுதி நாளைப்பற்றி அறிவுறுத்துவது, இதன் அத்தியாவசியத்தை உணர்த்துவதற்காகவே கூட இருக்கலாம். அதிமுக்கியத்துவம் வாய்ந்த இப்பொறுப்பை நிறைவேற்றுவதில் உரிய சிரத்தை, (அக்கறை)காட்டாமல் தாமதப்படுத்திக் கொண்டு போகும் காலக் கட்டத்தில் திடீரென ஒரு நாள் இறுதிநாள் (கியாமத்நாள்) சம்பவித்து விட்டால் நாம் குற்றவாளிகளாக அல்லாஹ்வின் முன் நிற்க நேரிடும் என்ற எச்சரிக்கையும் ஆகும். இஃது

மக்கள் நீதியுடன் நடந்திடவும் ஆட்சியாளர்கள் மக்களுக்கு நீதி வழங்கவும்' ஏற்றவகையில் சமத்துவ சமுதாயத்தை அமைப்பதைக் கொண்டே திருக்குர்ஆன் நம்மீது சுமத்தும் இந்தக் கடமையை நாம் நிறைவேற்றியவர்களாவோம். இத்தகைய சமுதாயம் அமைவதற்கான அடித்தளமும், நிர்மாண அமைப்பும் திருக்குர்ஆன் விவரிக்கும் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் சட்டத்திட்டங்களிலுமே காணப்படும்.

நம் மீது சுமத்தப்பட்டுள்ள இப்பொறுப்பை நிறைவேற்றிட நாம் மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பணிகள் யாவை என்று வினவப் படலாம். இக்கேள்விக்கு முழுமையான பதில் தருவது இந்நூல் எழுதப்படுவதன் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. எனினும் இது குறித்து சில கருத்துக்களை இங்கே எடுத்துரைப்பது

பொருத்தமாகவே அமையும். மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தவும் நீதமும் சமத்துவமும் நிலவும் சமுதாயத்தை நிலைநாட்டவும் திருக்குர்ஆன் அறிவுறுத்துவதை சமூக , பொருளாதார, மற்றும் அரசியல் இயக்கங்களின் பாணியில் புரிந்து கொள்ளக்கூடாது.

மேலும் இந்த உன்னதமான இலட்சியத்தை அடையப் பாடுபடுவது குறிப்பிடப்பட்ட இந்த இயக்கங்கள் வெற்றிபெறுவதற்காகப் பாடுபடுவது போன்று இருக்கவும் கூடாது. இவ்விதம் செய்வது மிகவும் ஆபத்தானது தற்கொலைக்குச் சமம். தனி மனிதன் ஒருவனை, இஸ்லாம் இயம்புவதற்கேற்ப, திருத்திட ஒரே ஒரு வழியே உள்ளது: அதுபோலவே சமுதாயத்தில் இஸ்லாமியப் புரட்சியை உண்டுபண்ணவும் ஒரே ஒரு வழியே உள்ளது என்பதை உணர வேண்டும். தனிமனிதனைப் பொருத்தவரையில், அவனுடைய உள்ளத்தையும் புத்தியையும் திருக்குர்ஆன் ஆக்கிரமிக்கச் செய்ய வேண்டும்: அதன் மூலம் அவனுடைய உணர்வும், எண்ணமும், சிந்தனையும் யாவும் திருக்குர்ஆனுடைய தத்துவங்களை ஒட்டி அமைய வேண்டும்: இதன் விளைவாக அவனுடைய செயல்கள் யாவும் திருமறையின் போதனைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டவையாக அமையும்.

இஸ்லாம் விரும்பும் சீர்திருத்தத்தைச் சமுதாயத்தில் வரவழைக்க, முதன்முதலாக சமுதாயத்தில் அறிவாற்றல் படைத்தவர்களுக்கு திருக்குர்ஆனைப்பற்றி எடுத்துரைத்து அவர்களின் இருதயங்களிலும் புத்தியிலும் திருக்குர்ஆனின் அறிவொளி வீசச் செய்ய வேண்டும்: இதன்மூலம் அவர்களுக்கு அறிவு பூர்வமாகவும் இறையுணர்வு ரீதியாகவும் நல்ல மாற்றம் ஏற்படும். சமுதாயத்தின் மூளையாகக் கருதப்படும் இவர்கள் அறிவுறுத்தப்பட்டபின் சமுதாயத்தின் பக்கவுறுப்புகளாகக் கருதப்படும் மற்ற மக்களுக்குத் திருக்குர்ஆனை எளிதாகப் புரிய வைக்க முடியும். இவ்விதம் சமுதாயத்தின் இதயத்துடிப்பையே திருக்குர்ஆனின் போதனைக்கு உகந்ததாக மாற்றி அமைத்து விடமுடியும். இதன் விளைவாக மார்க்கத்தினுடைய அடிப்படைக் கோட்பாடுகள் சமுதாய ரீதியாக, ஒரு நிறைவான ஒழுங்கு முறையின் வடிவில் நடைமுறை படுத்தப்படும்.

இதைத்தவிர, இந்தப் புரட்சியை வரவழைக்க வேறுவழியே இல்லை. இதல்லாமல், அரசியல் இயக்கங்களைத் தோற்றுவித்து, அவற்றின் மூலம் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் பாரம்பரிய மார்க்கத்தின் பால் அவர்களை ஈர்த்து இந்தப் புரட்சியை உருவாக்கலாம் என்று நினைப்பது பலன் தராது. இவ்வழியில் முயற்சிப்பது மணலில் வீடு கட்டுவதற்கு ஒப்பாகும்.

பிரதான நோக்கத்தை விட்டு அதை ஒட்டிய வேறுபல கருத்துக்களைக் கூற நேர்ந்தமைக்கு மன்னிக்கவும். திருக்குர் ஆனின் போதனைகளுக்கேற்பச் செயல்படுவது இருவகைப்படும் என்பதை மீண்டும் கூற விரும்புகின்றேன். ஹு க்ம் பிமா அன்ஸலல்லாஹ், அல்லாஹ் இறக்கியருளியதைக் கொண்டு ஒவ்வொரு காரியத்திலும் தீர்வு அல்லது நீதி காண்பது, மற்றும் இக்காமத்து மா உன்ஸில மின் அல்லாஹ் அல்லாஹ்விடமிருந்து இறங்கியதை நிலைநாட்டுவதும். ஆகிய இவ்விரண்டும் தனிப்பட்ட முறையிலும் சமுதாய ரீதியாகவும் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டவை. எனவே ஒவ்வொரு முஸ்லிமும் அவனுடைய தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற விதத்தில் தனி மனிதனாகவும் சமுதாயத்தில் (உம்மத்தில்) ஓர் அங்கம் என்ற வகையிலும் சமுதாயத்தின் தகுதிக்கும் பலத்திற்கும் ஏற்ற விதத்திலும் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற உண்மையுடன் உழைக்க வேண்டும்.

தப்லீக் வ தபியீன்: (திருக்குர் ஆனின் போதனையையும் அதன் விரிவுரையும் பிரசாரம் செய்தல்)

திருக்குர்ஆனை, இறை வேதம் என்று நம்புவது, வாசிப்பது, புரிந்து கொள்வது, அதன் போதனைப்படிச் செயல்படுவது ஆகிய நான்கும் திருக்குர்ஆன்மீது நமக்குள்ள பொறுப்புகள் ஆகும். இவையல்லாமல்

ஒவ்வொரு முஸ்லிமும் அவனுடைய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற விதத்தில் நிறைவேற்ற வேண்டிய வேறொரு பொறுப்பும் உண்டு. அதன் போதனைகளை மற்றவர்க்கு எடுத்துரைப்பது தான் அது.

திருக்குர்ஆனின் போதனைகளை மக்களுக்கு அறிவிப்பதும் என்பதற்குப் பொருத்தமான, பொருட்செறிவுள்ள வார்த்தை தப்லீ.்.க்' என்பதாகும். இந்தப் பணிக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட முறையும், படித்தரமும் உண்டு. திருக்குர்ஆனை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதும் தப்லீ.்.க்" தான். திருக்குர்ஆனின் பொருளை மற்றவர்களுக்கு விளக்கி உரைப்பது ஒரு படி மேலான தப்லீ.்.க்' ஆகும்.

திருக்குர்ஆன் மீது நமக்குள்ள பொறுப்புகளில் ஒன்றாகிய இந்தப் பணியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, திருக்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கத்தைப்பற்றிச் சிறிது ஆய்வோம். திருக்குர்ஆனிலேயே அதைப்பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 14:52)

இது (குர்ஆன்) மனிதர்களுக்கு ஓர் அறிக்கையாகும்: அது அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் ஆகும். (அல்குர்ஆன் 14:52.)

மேலும், நபி(ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் இறக்கி அருளப்பட்டதன் அடிப்படை நோக்கம் 6:19 இறைவசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கும் (அது) யாரையெல்லாம் சென்றடைகிறதோ அவர்களுக்கும் நான் எச்சரிக்கை ஃட்டுவதற்காகவே, இந்த குர்ஆன் எனக்கு வஹி மூலம் இறக்கியருளப்பட்டது. (அல்குர்ஆன் 6:19.)

திருக்குர்ஆனின் போதனையை (உணர்வுபூர்வமாக) ஆத்மார்த்தமாக அறிவிப்பதே நபி(ஸல்) அவர்களின் தலையாயக் கடமை என்பதையும் திருக்குர்ஆன் தெரிவிக்கின்றது. இந்த கடமையைச் செய்வதில் சிறிதளவு உதாசீனம் காட்டுவது கூட, தூதுத்துவப் பணியில் ஏற்பட்ட மிகக் கடுமையான ஒரு குறையாகவே கருதப்படும்

தூதரே! இறைவனிடமிருந்து உமக்கு அருளப் பெற்றதைப் பிரகடனப் படுத்தி விடுவீராக. நீர் அவ்வாறு செய்யாவிட்டால் அவனுடைய தூதைப் பிரகடனப்படுத்தி நிறைவு செய்தவராக மாட்டீர்" (அல்குர்ஆன்5:67)

முதல் வஹீ இறங்கியது தொடங்கி அவர்களுடைய 23 வருட வாழ்க்கையின் இறுதி வரை, அல்லாஹ்வின் ஆணைக்கு முற்றிலும் அடிபணிந்து தங்களுக்குத் தரப்பட்ட மிகச் சிறப்பு வாய்ந்த கடமையை நிறைவேற்ற, விவரிக்க முடியாத துன்பங்களைச் சகித்துக் கொண்டு தொடர்ந்து போராடினார்கள். இந்த நீண்ட நெடிய வீரார்ந்த போராட்டத்தில் பல்வேறு கட்டங்களைச் சந்திக்க நேரிட்டது. இந்தப் பணியை நிறைவேற்ற பற்பல பதவிகளையும் பொறுப்புகளையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நடவடிக்கைகள்யாவுமே திருக்குர்ஆனின் போதனையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. திருக்குர்ஆனை ஓதுவதிலும் அதன் பொருளை விளக்குவதிலும் மக்களுக்கு அதன் போதனையைக் கற்பிப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். மக்களின் அறிவை விருத்தி செய்யவும், அவர்களின் ஒழுக்கத்தைச் சீர்படுத்தவும் அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் திருமறையைக் கற்பித்ததைத் திருக்குர்ஆன் நான்கு வெவ்வேறு இடங்களில் விவரிக்கின்றது.

அவர் (தூதர்), அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்தி, வைக்கின்றார். அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்! (அல்குர்ஆன் 3:164)

நம் சமுதாயத்தில் இஸ்லாமியப் புரட்சியை உருவாக்க நாம் முன்பு குறிப்பிட்ட செயல்முறை மேலே குறிப்பிட்ட திருக்குர்ஆனின் வசனம் கூறும் முறையேதான் என்பது தெளிவு. சுருங்கக் கூறின், நபி (ஸல்) அவர்கள் இதே முறையைத்தான், மிகுந்த தைரியத்தோடும், பொறுமையோடும் 23 ஆண்டுகளாகப் பின்பற்றி அல்லாஹ்வின் மார்க்கத்தை மக்களுக்குக் கற்பிக்கும் பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார்கள். இந்தப் பணியை நிறைவேற்ற ஆர்வமுடைய அவர்களுடைய தோழர்களின் ஒத்துழைப்பையும் நபி(ஸல்) அவர்கள் பெற்றார்கள்.

என்னிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது ஒரே ஒரு வசனமாக இருந்தாலும் அதை மக்களுக்கு அறிவித்து விடுங்கள்“ என்று கூறி அவர்களை ஊக்குவித்தார்கள்.

தன்மீது சுமத்தப்பட்டப் பணியைச் செம்மையாக நிறைவேற்றிவிட்டு, திருமறையை மக்களுக்குக் கற்பிக்கும் பொறுப்பைத் தங்களின் முஸ்லிம் சமுதாயத்தினரிடம் ஒப்படைத்தார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தை வெற்றிகரமாக மக்களுக்குக் கற்பித்துவிட்டதாக மக்களிடம் இருந்து நபி(ஸல்) அவர்கள் பல தடவை சாட்சியம் பெற்றார்கள். ஒரு லட்சத்து இருபத்து ஐயாயிரம் நபித்தோழர்கள் கூடி இருந்த நபி(ஸல்) அவர்களுடைய இறுதி ஹஜ் யாத்திரையின் போது அவர்களுக்கு இவ்வாறு பணித்தார்கள்.

இங்கே பிரசன்னமா (ஆஜராகி)யிருப்பவர்கள் நான் அறிவித்தவற்றை இங்கே வராதவர்களுக்கு அறிவித்து விடவேண்டும்

அல்லாஹ்வின் மார்க்கத்தை இனிவரும் காலமெல்லாம் உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் பரப்பும் பொறுப்பு இவ்விதமாக முஸ்லிம் சமுதாயத்தினர் மீது சுமத்தப்பட்டது. இந்தப் பொறுப்புள்ள கடமையைப் பொருத்து அல்லாஹ்விடம் கணக்குக் கொடுக்கும் பொறுப்பு ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தினரையும் சாரும் . சமுதாயம் (உம்மத்) தனிமனிதர்களைக் கொண்டே அமையப் பெறுவதால் தனிமனிதன் ஒவ்வொருவரும் இந்த கடமையை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார்: கற்றவர்கள் அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்பவும், சாதாரண மக்கள் அவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்பவும் இக்கடமையை நிறைவேற்றியாக வேண்டும்.

என்னிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது ஒரே ஒரு வசனமாக இருந்தாலும் அதை மக்களுக்கு அறிவித்து விடுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய வார்த்தைகள், எந்தவொரு தனிமனிதனும் இந்தக் கடமையிலிருந்து விதிவிலக்கானவன் அல்ல என்பதை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிருபிக்கின்றன. ஒருவனுக்குத் திருக்குர்ஆனின் அரபி வசனங்களை வாசிக்க மட்டுமே தெரிந்திருந்தாலும் அதை மற்றவர்க்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்: திருக்குர் ஆன் முழுவதையும் மனனம் செய்திருப்பவர்கள் மற்றவர்களும் மனனம் செய்ய உதவி செய்ய வேண்டும்: மொழியாக்கம் செய்யும் ஆற்றலுள்ளவர்கள் மொழியாக்கம் செய்து மற்றவர்கள் பலனடையச் செய்ய வேண்டும்: பொருள் விரிவுரை செய்யும் திறன் படைத்தவர்கள் மற்றவர்களுக்குப் பொருள் விரிவுரை செய்து உதவ வேண்டும், ஒரே ஒரு சகூராவின் பொருளை விளங்கிப் புரிந்து கொண்டவர்கள் அதை மற்றவர்க்குக் கற்பிப்பதும் அதுபோல ஒரே ஒரு வசனத்தின் பொருளை மட்டுமே அறிந்திருப்பவர் அதை மற்றவர்க்குப் போதிப்பதும் திருக்குர்ஆனைக் கற்பிக்கும் கடமையை நிறைவேற்றியதாகவே ஆகும். ஆனாலும் முஸ்லிம் சமுதாயத்தினர் (உம்மத்தினர்) மீது சுமத்தப்பட்டுள்ள கடமை நிறைவேறியதாக ஆகிவிடாது. திருக்குர்ஆனை ஓதவும் அதன் பொருளை உணரவும் மக்களுக்குக் கற்பித்து, உலக மக்கள் அனைவரும் திருக்குர்ஆனின் போதனைகளின் அவசியத்தை உணரச் செய்யும் வரை முஸ்லிம் சமுதாயத்தினர் (உம்மத்தினர்) தங்களின் கடமையை நிறைவேற்றியவர்களாக ஆகி விடமாட்டார்கள்.

அல்லாஹ்வின் மார்க்கத்தை உலக மக்களுக்குப் போதிப்பது உலக முஸ்லிம்கள் மீதுள்ள கடமை ஆகும். ஆனால் இன்று இந்தக் கடமை உதாசீனம் (அலட்சியம்) செய்யப்படுகிறது. சாத்தியமல்லாத

ஒரு காரியமாகக் கருதப்படுகிறது. கண்ணியமிக்க இந்தக் கடமை சுமத்தப்பட்டுள்ள முஸ்லிம்கள் திருக்குர்ஆனைப் பற்றி அறவே அறியாதவர்களாக மாறிவிட்டது தான் இதற்குக் காரணம். இவ்விதம் நடைமுறை அல்லது செயல்பாடுகளைப் பொறுத்த வரையில் அலட்சியம் செய்யப்பட்டுவிட்ட திருக்குர்ஆனைப் பற்றி முஸ்லிம் சமுதாயத்தினருக்கே (உம்மத்தினருக்கே) கற்பித்தாகவேண்டும். எனவே, முஸ்லிம்கள் திருக்குர்ஆனைக் கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கவும் ஓர் இயக்கத்தை உருவாக்குவதுதான் உடனடியான தேவை. திருக்குர்ஆன் மீது புதிதாக ஈடுபாடும் அக்கறையும் கொள்ளவேண்டும், இத்தகைய ஒரு பணியை மேற்கொள்வதற்குரிய ஆற்றலை அல்லாஹ் நமக்குத் தந்தருள்வானாக!

ஏற்கனவே குறிப்பிட்டது போல் தப்லீஃகில்' ஒரு மேலான படித்தரம் தபியின்' ( விரிவுரை) ஆகும். திருக்குர்ஆன் தரும் போதனையை மட்டுமல்லாது அதன் பொருளையும் மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும். இதற்குத் திருமறை பிரயோகிக்கும் வார்த்தை தபியின்' என்பதாகும். எனவே தான் இந்த அத்தியாயத்தின் தலைப்பு தப்லீஃக்' மற்றும் தபியின்' என தரப்பட்டுள்ளது.

திருக்குர்ஆனின் விரிவுரையை மக்களுக்கு எடுத்துரைக்க முன்வருபவர்கள் கீழ்வரும் முறைகைளைக் கையாள வேண்டும்

1) செவிமடுப்பவர்களின் தரத்தை அறிந்து அதற்கேற்ப எடுத்துரைக்க வேண்டும். அப்படியானால்தான் திருக்குர்ஆன் கூறும் உண்மையை அவர்கள் உணர முடியும்

2) வெவ்வேறு வசனங்கள் மற்றும் (சகூராக்கள்) அத்தியாயங்கள் குறிப்பாகச் சுட்டிக்காட்டுபவற்றையும் அவற்றின் வாத ஆதாரங்களையும் தெளிவாக விவரித்துக் கூறவேண்டும்.

இது பொதுவாக மனிதர்களுக்கு (உண்மையை) த் தெளிவாக்கக் கூடியதாகவும், இறையுணர்வுடையோர்க்கு வழிகாட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இருக்கின்றது" (அல்குர்ஆன் 3:138)

திருக்குர்ஆன் தன்னைத்தானே அடிக்கடி முபீன்' ( தெளிவானது) என்றும் தன்னகத்துள்ள வசனங்களை பய்யினாத் மற்றும் முபய்யினாத் (தெளிவான அத்தாட்சிகள் மற்றும் சான்றுகள்) என்றும் கூறிக் கொள்கிறது. திருமறை வசனங்களை விவரித்துக் கூறுவதும் அதன் பொருள் விளக்கங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவதும் அவை இறக்கியருளப்பட்ட நபிமார் களுடையவும் அவர்களுடைய சமுதாயத்தினரின் (உம்மத்தினருடையவும்) கடமையாகும் என்றும் திருக்குர்ஆன் சுட்டிக் காட்டுகிறது. இந்த கருத்து நபி(ஸல்) அவர்களை நோக்கி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

மனிதர்களுக்காக அருளப்பட்ட இதை (வேதத்தை) நீர் அவர் களுக்குத் தெளிவாக எடுத்துரைப்பதற்காகவே இந்தக் குர்ஆனை உமக்கு அருளினோம். ~தர்களும் கிறித்துவர்களும் அவர்களுக்கு அருளப்பட்ட வேதத்தை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டுமென்ற ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டனர் என்று திருக்குர் ஆன் கூறுகிறது. (அல்குர்ஆன்16:44)

வேதம் கொடுக்கப் பெற்றவர்களிடம் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதத்தை மறைத்து விடாது மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்" என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கினான் என்பதை நினைவு கூர்வீராக!

அவர்கள் இந்த ஒப்பந்தத்தை மீறியதோடல்லாமல், அதற்கு நேர்மாறாக உண்மையை மறைக்க முயன்றபோது. அவர்கள் சபிக்கப்பட்டார்கள்.

நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் அருளி, அவற்றை மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவுபடுத்திய பின்னும் எவர்கள் (அவற்றை) மறைக்கின்றார்களோ அவர்களை, நிச்சயமாக

அல்லாஹ்வும் சபிக்கின்றான், (மற்றும்) சபிக்கின்றோரும் அவர்களைச் சபிக்கின்றனர்“ (அல்குர்ஆன் 2:159)

தபியின்“ (விரிவுரை) என்பது பல்வேறு முறைகளைக் கொண்டது. மிக எளிய முறை என்னவெனில் திருக்குர்ஆனின் தெளிவான பொருளை எளிய நடையில் நேரடியாகப் பாமர மக்களின் புழக்கத்திலுள்ள மொழியில் எடுத்துரைப்பதாகும். எனவே திருக்குர்ஆனை மக்களுக்கு அவர்களுடைய மொழியிலேயே விளக்கிச் சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு தூதரும் (தன் மக்களுக்குத்) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு அவரவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை செய்யுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம். (அல்குர்ஆன்14:4)

தபியினி‘ன் (விரிவுரையின்) மிகவுயர்ந்த நிலை, ஒரு வகையில் சவால் விடுவிக்கக்கூடிய ஒரு பணி ஆகும். திருக்குர்ஆனின் விரிவுரையை இந்த முறைப்படி மக்களுக்கு எடுத்துக் கூற முன் வருபவர்கள் அதன் வசனங்களை வெறுமனே மொழியாக்கம் செய்தால் மட்டும் போதாது: அதில் அடங்கியுள்ள கருத்தையும் அறிவையும் விளக்கிக் கூற வேண்டும் அத்தியாயங்களிலும் (சூராக்களிலும்) வசனங்களிலும் (ஆயத்துக்களிலும்) பொதிந்துள்ள நுட்பமான கருத்துக்களையும் விவரிக்க வேண்டும்.

திருக்குர்ஆனில் பொதுக் கருத்திலிருந்து தனிப்பட்ட உண்மையைப் பிரித்துத் தரும் முறை, ஒரு முடிவை அல்லது தீர்வைத் தரும் விதம், ஆகியவற்றை எடுத்துரைக்க வேண்டும். மக்களிடம் பரவியுள்ள தவறான கருத்துக்களையும் வழிகெடுக்கும் கோட்பாடுகளையும் திருக்குர்ஆனிலுள்ள வாதங்களின் உதவியோடு நீக்க முயல வேண்டும். கால நிலைக்கு ஏற்ப மக்களிடையே ஏற்பட்டிருக்கும் அறிவு வளர்ச்சிக்கு உகந்தவகையில் அறிவு பூர்வமாக எடுத்துரைத்து திருக்குர்ஆன் கூறும் உண்மையைப் போதிக்க வேண்டும்.

திருக்குர்ஆனை விளக்கிக் கூறி மக்களுக்கு அதன் போதனையைப் புரிய வைக்கும் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றுவது எப்படி என்ற கேள்வி எழலாம். திருக்குர் ஆனை உலகிலுள்ள முக்கியமான மொழிகளில் எல்லாம் மொழியாக்கம் செய்தும் விரிவுரை வழங்கியும் பிரசுரித்து, உலகெங்கும் பரப்ப வேண்டும். இது தபியீனின் எளிய முறை. தபியீனின் (விரிவுரையாளர்) உயர்ந்த முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் திருக்குர்ஆனைக் கற்பித்துக் கொடுப்பதுடன் அதனின் ஆய்வும் செய்யக் கூடிய பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிலையங்கள் ஆகியன முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் உலகம் முழுமைக்குமாக நிறுவப்படல் வேண்டும். இல்லையேல் இந்தப் பணியைச் செம்மையாகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்ற முடியாது. நல்ல தரமான இத்தகைய நிறுவனங்கள் மூலமே திருக்குர் ஆனின் போதனையை இன்றைய நவீன உலக மக்களுக்குக் கற்பிக்க முடியும்.

வாசகர்களோடு நேரடியாக ஓரிரு வார்த்தைகள்:

அன்புடைய வாசகர்களே! உங்களுக்கு நேரடியாக ஓரிரு வார்த்தைகள் கூறத் துணிவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். உங்கள் நலனில் நான் கொண்டுள்ள ஆர்வமும் அக்கறையுமே இதற்குக் காரணம் ஆகும்.

திருக்குர்ஆனின் மீது நமக்குள்ள பொறுப்புகளைப்பற்றி ஓரளவு உங்களுக்கு விளக்கிவிட்டேன். இறுதியாக இந்தப் பொறுப்புகளை எல்லாம் நிறைவேற்றுவதற்கு உளமாற உண்மையுடனும், மிக்க கவனத்துடனும் முயற்சி செய்யுமாறு உங்களை என்னால் இயன்ற வரை வற்புறுத்தியே ஆக வேண்டும். அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனை அதன் அசல் வடிவில் முழுமையாக இன்றும் நம் கைவசம் பெற்றுள்ள நாம் உலகிலேயே மிக பாக்கியம் பெற்றவர்களாவோம். நாம் கண்ணியமுடையவர்களாவதற்கு

இது காரணமாவது போலவே, நாம் பெரும் பொறுப்பைக் கொண்டவர்களாக விளங்குவதற்கும் இது காரணமாகிறது.

நபி(ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன் அல்லாஹ்வின் வேதம் அருளப்பட்டவர்கள் இஸ்ரவேலர்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை அவர்கள் நிறைவேற்றவில்லை: அதன் மூலம் அவர்களுக்கு அருளப்பட்ட கண்ணியத்திற்கு அருகதை யற்றவர்களாயினர். அல்லாஹ் புதியதோர் உம்மத்தினரைத் (முஸ்லிம்களை) தோற்றுவித்தான்: அவர்களுக்கு திருக்குர்ஆனை இறக்கியருளினான். வேதம் வழங்கப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றாமலிருந்தவர்களுக்கு அல்லாஹ் திருக்குர் ஆனில் 52, வது சூராவில் ஓர் உதாரணத்தைக் கூறுகின்றான்.

தவ்ராத் எனும் வேதம் அவர்கள் மீது சுமத்தப்பட்டப் பின்னரும், அதன்படிச் செயல்படாதவர்கள், ஏடுகளைச் சுமந்து செல்லும் கழுதைக்கு உதாரணமாவார்கள்.“

இதைத்தொடர்ந்து அதே வசனத்தில் வேதம் வழங்கப்பட்டவர்கள் அவ்வேதத்தின் மீது தங்களுக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றாதவர்கள் அவ்வேதத்தைப் பொய்ப்பித்ததற்கு ஒப்பாகும் என்றும் கூறுகிறான்.

அல்லாஹ்வினுடைய வசனங்களைப் பொய்யாக்கிய சமூகத்தாரின் இவ்வுதாரணம் மிகக் கெட்டதாகும்“ 62:4 மேலும் அல்லாஹ் (இத்தகைய சமுதாயத்தினரை) நேர்வழியில் செலுத்த மாட்டான்“ என்றும் முடிவடைகிறது.

இவ்விதம் அல்லாஹ்வின் வேதத்தின் மீதுள்ள பொறுப்புகளை நிறைவேற்றாமல் அதனைப் பொய்யாக்கிய குற்றத்திற்காக அல்லாஹ்வின் கோபத்திற்காளாகிய கூட்டத்தினரிடையே நீங்களும் நானும் உட்படாதிருக்க அல்லாஹ் அருள் புரிவானாக!

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை அவனுடைய திருக்குர்ஆனின் உண்மையான உரிமையாளர்களாக ஆக்கி, அதன் மீது நமக்குரிய பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றி அதன் மூலம் அவனுடைய திருப்பொருத்தத்தைப் பெற்ற நல்லடியார்களின் கூட்டத்தில சேர்த்தருள பிரார்த்திக்கின்றேன். மறுமையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அவனின் திருத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தோன்றி திருக்குர்ஆனை உதாசீனம் செய்த அவர்களுடைய சமுதாயத்தினருக்கு (உம்மத்தினருக்கு) எதிராக சாட்சியம் கூறுவார்கள் என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும்,

(அல்லாஹ்வின்) தூதர் என் இரட்சகனே! நிச்சயமாக என்னுடைய சமூகத்தார் இந்தக் குர்ஆனை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டதாக எடுத்துக் கொண்டனர்“ என்று கூறுவார்! (அல்குர்ஆன்25:30)

இந்த வசனத்திலுள்ள என்னுடைய சமூகத்தார்“ எனும் சொற்றொடர் திருக்குர்ஆனை அலட்சியம் செய்து நிராகரித்த மக்களையே குறிப்பிடும். என்றாலும் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொண்டு இருந்தும் அதனைப் பொருட்படுத்தாமலும் நடைமுறையில் அதனை உதாசீனம் செய்து வாழும் நம்மையும் குறிக்காமலில்லை.

மவ்லானா சபீர் அஹ்மது உத்மானி அவர்கள் இதைக்குறித்து கூறிய கருத்தை அறிவிக்க விரும்புகிறேன். யதார்த்தத்தில் இந்த வசனம் (திருக்குர்ஆனை) நிராகரித்தவர்களைத் தான் குறிக்கும் என்றாலும், இதற்குப் பரந்த ஒரு விளக்கம் இருக்கத்தான் செய்கிறது. வாழ்க்கையில் திருக்குர்ஆனின் போதனைகளை ஏற்று நடைமுறைப் படுத்தாதவர்களையும், அதைப் பற்றி சிந்திக்காதவர்களையும், அதனை முறையாக ஓதாதவர்களையும், அதை முறையாக ஓதக் கற்றுக் கொள்ளதவர்களையும் குறிப்பிடுகிறது என்பதும் உண்மையே. திருக்குர்ஆனை ஒதுக்கித் தள்ளிவிட்டு எல்லா விதமான வீணான பலனற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களையும், இவ்வசனம் குறிக்கிறது. இவர்கள் யாவரும் திருக்குர்ஆனைப் புறக்கணித்த குற்றத்திற்கு உள்ளாவார்கள்.

இத்தகைய கூட்டத்தாரில் நாம் உட்படாதிருக்க அல்லாஹ்வை மீண்டும் பிரார்த்திக்கின்றேன். சாதாரணமாகத் திருக்குர்ஆனை முழுவதும் ஓதி முடித்தபின் ஓதும் (துவா) பிரார்த்தனையை இங்கே அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கின்றேன். இந்த பிரார்த்தனை (துவா‘) அடிக்கடி கேட்கப்பட வேண்டும். அல்லாஹ்வின் வேதமாகிய திருக்குர்ஆன் மீது நமக்குரிய பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்ற அது உதவி புரியும் என நம்புகிறேன்.

என்னுடைய இரட்சகனே! திருக்குர்ஆன் மீது எங்களுக்குள்ள பந்தம் காரணமாக எங்களுக்கு அருள் புரிவாயாக! அதனை எங்களுக்கு நிலையான ஒளியாக, வழிகாட்டியாக அருட்கொடையாக ஆக்கி அருள்வாயாக! நாங்கள் எதை உணரத்தவறி விட்டோமோ அதை அதன் மூலம் எங்களுக்கு உணர்த்துவாயாக! திருக்குர்ஆனை இரவிலும் பகலிலும் ஓதுவதற்குரிய மனப்பான்மையைத் தந்தருள்வாயாக! (மறுமையின்) இரட்சைக்கு (வெற்றிக்கு) திருக்குர்ஆன் எங்களுக்கு உதவியாகத் திகழ அருள் புரிவாயாக!

இறுதியில் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு பிரார்த்தனையை (துவாவை) அறிவிக்க விரும்புகின்றேன். மனக்கவலைக்கு நிவாரணமாக நபித்தோழர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் அறிவித்த பிரார்த்தனையாகும் இது. ஓர் அடிமை அவனுடைய எஜமானனிடம் காட்டும் விசுவாசத்திற்கு எடுத்துக் காட்டாகும், திருக்குர்ஆன் மனிதனுக்கு வழங்கும் நிவாரணத்திற்கு உதாரணமாகவும் விளங்கும் இவையல்லாமல் நபி(ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றையும் உயரிய மதிப்பையும் அது எடுத்துக் காட்டுகிறது.

அல்லாஹ்வே! உண்மையாக நான் உன் அடிமை: உன் ஆண் பெண் அடிமைகளின் மைந்தன் உன்னுடைய அதிகாரத்திற்குட்பட்டவன் என் முன் (முடி) குடுமி உன் கையில் என்னைப் பற்றிய தீர்ப்பை வழங்குபவன் நீயே் நீதியையே நீ எனக்கு வழங்குவாய் உனக்கு நீயே வழங்கிய பெயர்கள் அனைத்தையும் கொண்டும், உன்னுடைய படைப்பினங்களுக்கு அறிவித்த பெயர்களைக் கொண்டும், உன்னுடைய திருமறையில் ஆதார, நூல், வெளிப்படுத்தியுள்ள பெயர்களைக் கொண்டும் உன்னை மன்றாடிக் கேட்கிறேன் திருக்குர்ஆன் என் இதயத்திற்கு மகிழ்ச்சியையும், ஒளியையும் ஊட்டி, என்னுடைய துன்பங்களையும், கவலைகளையும் களையச் செய்ய அருள்புரிவாயாக! அகில உலக இரட்சகனே! என்னுடைய இந்தப் பிரார்த்தனையை அங்கீகரிப்பாயாக!